# ஸ்ரீமத் பகவத்கீதை

## கடமைமூலம் கடவுள்



# ஸ்ரீமத் பகவத்கீதை

## கடமைமூலம் கடவுள்

பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரையுடன்




விளக்கியவர்

சுவாமி ஆசுதோஷானந்தர்



**ஸ்ரீராமகிருஷ்ண மடம்**

மயிலாப்பூர், சென்னை-600004

# பொருளடக்கம்


பக்கம்

| | |
|---|---|
| *பதிப்புரை* | v |
| *ஸ்ரீமத் பகவத்கீதை: ஒரு கண்ணோட்டம்* | xiii |
| *கீதையின் பாதை* | xxii |
| *ஸ்ரீகிருஷ்ணர்* | xxxv |
| *கீதா தியானம்* | 2 |

1

**அர்ஜுன விஷாத யோகம்** (குழப்பமும் கலக்கமும்) **11**

*திருதராஷ்டிரனின் கேள்வி 1* ; போர்வீரர்களின் வர்ணனை 2–11 ; படைகளின் சங்க நாதம் 12–19 ; அர்ஜுனன் படைகளைப் பார்வையிடுதல் 20–27 ; அர்ஜுனனின் குழப்பமும் கலக்கமும் 27–47 ; போரிட மறுப்பதற்கு அர்ஜுனன் கூறும் எட்டு காரணங்கள் 28–44 ; போரின் தீய விளைவுகள் 40–44.*

2

**சாங்கிய யோகம்** (உண்மையறிவைத் துணைகொள்) **40**

*ஸ்ரீபகவானின் எழுச்சியூட்டும் வார்த்தைகள் 1–3 ; அர்ஜுனன் போரிட மறுப்பதற்கான இரண்டு காரணங்கள் 4–6 ; அர்ஜுனனின் சரணாகதி 7–10 ; ஸ்ரீபகவானின் கீதா உபதேசம் ஆரம்பம் 11 ; அர்ஜுனன் போர் செய்தேயாக வேண்டும்: மூன்று கோணங்கள் 12–36; யோக வாழ்வு 37–48 ; புத்தி யோகம் 49–58 ; ஆசையின் தன்மை 59 ; புலன்களின் வலிமை 60 ; புலன்களை வசப்படுத்த இறைவனை நாட வேண்டும்: 61 ; உலகை நாடுபவனின் கதி 62–63, 67 ; யாருக்கு அமைதி கிடைக்கும் 69–72 ;* ***அர்ஜுனனின் குழப்பம்: ஒரு கண்ணோட்டம் பக்: 49.***


* சுலோக எண்கள்.

3

**கர்ம யோகம்** (வாழ்க்கையே யோகம்) **125**

*இரண்டு நெறிகள் 1–3 ; கர்மயோகம் 4–35 ; மூன்று நிபந்தனைகள்: 7,9,31–32 ; இரண்டு அடிப்படைகள்: 27–28, 32–35 ; வேள்விக் கருத்து: 10–18 ; வேள்விச் சக்கரம்: 14–18 ; ஆசை 36–43.*

4

**ஞானகர்ம சன்னியாச யோகம்**
(கடமைகளை வேள்வியாகச் செய்) **173**

*யோகங்களின் பழமை 1–3 ; அவதார தத்துவம் 4–12 ; செயலில் செயலின்மை (ஞானகர்ம சன்னியாசம்) 13–42 ; பல்வேறுவேள்விகள்: 24–30 ; ஞானம் கிடைக்க மகான்களை நாடவேண்டும் 34 ; ஞானத்தின் மகிமை 35–38 ; ஞானம் பெற என்ன செய்ய வேண்டும் 39 ; சந்தேகம் கூடாது 40–42 ;* ***பன்னிரு வேள்வி களும் அவற்றின் நோக்கமும்: பக்.215.***

5

**சன்னியாச யோகம்**
(ஒன்றைத் தேர்ந்தெடுத்து செயல்படு) **230**

*செயல்களைச் செய்வதா, விடுவதா 1–2 ; செயல்களை விடுவதற்கான தகுதி படைத்தவன் யார் 3 ; ஒன்றைத் தேர்ந் தெடுத்து பின்பற்றுவதே முக்கியம் 4 ; செயலில் செயலின்மை காண்பதே சரியான கண்ணோட்டம் 5 ; செயல்களை விடுவது அவ்வளவு சுலபம் அல்ல 6 ; செயலில் செயலின்மை காண்ப வனைச் செயல்கள் பிணைப்பதில்லை 7 ; அந்த நிலையை அடைய விரும்புபவன் எவ்வாறு செயல்பட வேண்டும் 8–11 ; யாருக்கு அமைதி கிடைக்கும் 12–13 ; செயல்களைச் செய்வது யார் 14: யாருடைய பாவ புண்ணியங்களுக்கும் இறைவன் பொறுப்பல்ல 15 ; ஆன்மஞானத்தால் இறையனுபூதி வாய்க் கிறது 16 ; ஆன்மஞானம் பெற்றவர்கள் பிறப்பதில்லை 17 ; அவர்களது அனுபவம் எத்தகையது 18–26 ; தியான யோகத்தின் அடிப்படைப் பயிற்சிகள் 27–28 ; கடவுள் நமது நண்பர் 29.*

(6)

**தியான யோகம்** (மனத்தை வசப்படுத்து) **254**

*யார் உண்மையான துறவி 1 ; எது ஒருவனைத் துறவியாக ஆக்குகிறது 2 ; செயல்களில் ஏன் ஈடுபட வேண்டும் 3 ; எப்போது ஒருவன் தியானயோக நிலையை அடைந்துவிட்டதாகக் கருதப்படுவான் 4 ; நமக்குத் துணை நாமே 5 ; எந்த நிலையில் ஒருவன் தனக்கு நண்பனாகவும் தனக்குப் பகைவனாகவும் ஆகிறான் 6 ; தன்னை வென்றவன் எப்படி இருப்பான் 7 ; யோகி யார் 8–9 ; தியானயோகம் 10–36 ; இறைநெறியிலிருந்து வழுவியவனின் கதி 37–47 ;* ***தியானயோகம்: ஒரு கண்ணோட்டம்: பக். 270.***

(7)

**ஞான விஞ்ஞான யோகம்** (எங்கும் இறைவன்) **306**

*இறைவனை அறிவது யார் 1–3 ; படைப்பு 4–6 ; இறைவன் எவ்வாறு எங்கும் நிறைந்துள்ளார் 7–12 ; மனிதன் உலகை நாடவே தலைப்படுகிறான் 13 ; மனமயக்கத்திலிருந்து விடுபடுவது எப்படி 14 ; யாரால் இறைவனைச் சரண்புக முடிவதில்லை 15 ; வெவ்வேறு நோக்கங்களுக்காக இறைவனை நாடுகின்றனர் 16 ; அவர்களுள் சிறந்தவர் யார், ஏன் 17–19 ; தேவதை வழிபாடு 20–23 ; அவதார வழிபாடு 24–30.*

(8)

**அக்ஷர ப்ரஹ்ம யோகம்** (மரணத்திற்குப் பின்னால்) **336**

*அதிபூதம் போன்ற கருத்துக்கள் 1–4 ; மரணத்திற்குப் பின்னால் 5–13, 23–28 ; இறைவனை அடைந்தவனுக்குப் பிறப்பு இல்லை 14–17 ; படைப்பு என்பது என்ன 18–19 ; இறைவனை பக்தியால் அடையலாம் 20–22.*

(9)

**ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்** (பக்தியே ரகசியம்) **365**

*பக்தியோகத்தின் மகிமை 1–3 ; விஞ்ஞானம் 4–11, 16–19 ; தவறான பக்தியும் அதன் விளைவும் 11–12 ; உண்மையான*

*பக்தி 13–14 ; எல்லா யோகங்களின் மூலமும் ஒரே இறைவனையே நாடுகின்றனர் 15 ; சாதாரண மனிதர்கள் சம்சாரச் சுழற்சியில் வீழ்கின்றனர் 20–21 ; விஞ்ஞான பக்தனின் பேறு 22 ; இஷ்டதெய்வ வழிபாடு 23–29 ; அபய வாக்குகள் 30–34.*

10

**விபூதி யோகம்** (திருப்புகழ்) **398**

*கடவுளுடைய மகிமைகளின் இயல்பும் லீலா தியானத்தின் பலனும்1–9,19 ; லீலாதியானத்தால் புத்தி விழித்தெழுகிறது 10 ; புத்தியோக அனுபவம் 11 ; பிரார்த்தனை 12–18 ; லீலா தியானம் 19–42.*

11

**விசுவரூப தரிசன யோகம்** (வாழ்க்கையின் மறுபக்கம்) **433**

*அர்ஜுனனின் பிரார்த்தனை 1–4 ; விசுவரூபம் 5–7 ; தெய்வீகக் கண் 8 ; விசுவரூப வர்ணனை 9–14 ; லீலா தியானம் (உயர் பரிமாணம்) 15–44 ; ஸ்ரீபகவானின் சாதாரண வடிவம் 45–51 ; பக்தியால் விசுவரூபத்தைக் காணலாம் 52–55.*

12

**பக்தி யோகம்** (பக்தி செய்) **474**

*பக்தியோகம் சிறந்தது 1–2 ; ஞானயோகிகளும் இறைவனையே அடைகிறார்கள் 3–4 ; ஞானயோகம் கடினமானது 5 ; பக்தியோகத்தின் நான்கு நிலை சாதனைகள் 6–12 ; பக்தியோக அனுபூதியும் அதன் விளைவும் 13–19 ; பக்தியோகியின் அனுபூதி ஆரம்ப நிலையினருக்குச் சாதனை 20.*

13

**க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம்**
(மனிதனும் பிறவியும்) **492**

*வீடும் குடியிருப்பவனும் 1–18 ; சுக துக்க அனுபவங்களும் பிறவியும் 19–23 ; ஆன்ம அனுபூதி 24–34.*

14

**குணத்ரய விபாக யோகம்**
(மூன்று குணங்கள்) **521**

*முக்குண ஞானத்தின் மேன்மை 1–2 ; முக்குணமய மான மாயை இறைவனின் கருப்பை 3–4 ; மூன்று குணங்கள் 5–20 ; குணங்களைக் கடந்தவனின் அடையாளங்கள் 21–25 ; கடவுளை வழிபட்டால் குணங்களைக் கடக்கலாம் 26–27.*

15

**புருஷோத்தம யோகம்**
(வாழ்க்கை மரம்) **547**

*வாழ்க்கை மரம் 1–2 ; நாம் என்ன செய்வது 3–4 ; இறை வனைச் சரணடைவதற்கான தகுதிகள் 5 ; இறைவனை ஏன் சரணடைய வேண்டும் 6 ; நமது வாழ்க்கை நாம் தேடிக் கொண்டது 7 ; மரணத்தையும் அடுத்த பிறவியை யும்கூட நாமே முடிவு செய்கிறோம் 8 ; நாம் எவ்வாறு உலகை அனுபவிக்கிறோம் 9 ; வாழ்க்கையின் உண்மைகள் நமக்கு ஏன் தெரிவதில்லை 10 ; புத்தி விழித்தெழப் பெற்றவர்கள் யார், மூடர்கள் யார் 11 ; இறைவனின் மகிமை 12-20.* ***வாழ்க்கை மரம்: உவமை பக். 549 ; வாழ்க்கை மரம்: செய்திகள் பக்.550.***

16

**தெய்வாஸுர ஸம்பத் விபாக யோகம்**
(மனிதனின் இரண்டு பக்கங்கள்) **572**

*தெய்வீக இயல்புகள் 1–3 ; அசுர இயல்புகள் 4, 6–15, 17 ; இரண்டு இயல்புகளின் விளைவுகள் 5,16 ; அசுர இயல் பினரின் தவறு 18 ; உலகியல் மனிதர்களின் கதி 19–20 ; நரகத்தின் வாசல்கள் 21– 22 ; வாழ்க்கைக்கு வழிகாட்டி எது 23–24.*

17

**ச்ரத்தா த்ரய விபாக யோகம்**
(வாழ்க்கையின் மூன்று கோணங்கள்) **593**

*மூன்று கோணங்கள் (வழிபாடு: 4 ; தவம் 5–6, 14–19 ; உணவு 7–10 ; பூஜை, ஜபம் 11–13 ; தானம் 20–22) 1–22 ; ஓம் தத் ஸத் மந்திர விளக்கம் 23–28 ;* ***உணவு: ஒரு கண்ணோட்டம்: பக். 600.***

18


**மோட்ச சன்னியாச யோகம்**
(கடமைமூலம் கடவுள்) **620**

*சன்னியாசம், தியாகம் 1–2 ; தியாகம் 3–11 ; மூவகை வினைப்பயன்கள் 12 ; செயல் கர்மம் ஆவதற்கான ஐந்து நிபந்தனைகள் 13–15 ; எந்தச் செயலுக்கும் இறைவன் காரணம் அல்ல 16–17 ; செயல் எப்படி நிகழ்கிறது 18–19 ; மூவகை அறிவுகள் 20–22 ; மூவகைச் செயல்கள் 23–25 ; மூவகைக் கர்த்தாக்கள் 26–28 ; மூவகைக் கண்ணோட்டங்கள் 29–32 ; மூவகை முயற்சிகள் 33–39 ; மூவகை இன்பங்கள் 36–39 ; மூன்று குணங்களுக்கு அனைவரும் கட்டுப்பட்டவர்கள் 40 ;* ***கடமைமூலம் கடவுள்*** *(முதற்படி–கர்மயோகம் 45–49 ; இரண்டாம் படி–தியான யோகம் 50–53 ; மூன்றாம் படி–பக்தியோகம் 54–55)41–57 ; இறைவனை நாடாதவனின் கதி 58 ; அகங்காரம் எவ்வாறு செயல்படுகிறது 59–60 ; இறைவனைச் சரணடைவதே சிறப்பு 61–66 ; கீதையை யாருக்குச் சொல்லக் கூடாது 67 ; யாருக்குச் சொல்லலாம் 68 ; கீதை படிப்பதன் பலன் 69–71 ; அர்ஜுனனின் மனத்தெளிவு 72–73 ; சஞ்ஜயனின் நிறைவுரை 74–78.*

*ஸ்ரீகீதா மாஹாத்மியம்* (கீதையின் பெருமை) 682

*அகராதி* 695

# கீதையின் பாதை



## வாழ்க்கை வழிகாட்டி

'தன்னை அழுத்தத் துடிக்கின்ற சூழ்நிலைகளில் ஓர் உயிர் தன்னை வெளிப்படுத்தவும் நிறைநிலையை அடையவும் முயல்வதே வாழ்க்கை' என்று வாழ்க்கையை விளக்கினார் சுவாமி விவேகானந்தர். இவ்வாறு அழுத்தத் துடிக்கின்ற சூழ்நிலையில் வாழ்கின்ற மனிதன் தன்னை வெளிப்படுத்திக்கொள்ள, இறைநிலையை அடைய வழி உண்டா? உண்டு என்கின்றன நமது சாஸ்திரங்கள். ஆனால் அவை கூறுகின்ற பாதைகளைக் கடைப்பிடிக்கவோ, நேரம் ஒதுக்கி சாதனைகளில் ஈடுபடவோ இன்றைய மனிதனுக்கு நேரமில்லை, தகுதியான மனம் இல்லை, போதிய வசதிகள் இல்லை. இந்த நிலையில் அவன் என்ன செய்வது? இருக்கின்ற நேரத்தில், இருக்கின்ற மனத்தை வைத்து, இருக்கின்ற வசதிகளுடன், கடமைகளின் அழுத்தத்துடன், அவற்றிலிருந்து விலகாமலேயே தன்னை வெளிப்படுத்தவும் இறைநிலையை அடையவும் ஏதாவது வழி உண்டா? அதற்கு யாராவது வழிகாட்டுவார்களா?

'ஆம்' என்று பதில் தருகிறது கீதை. எதிலிருந்தும் விலக வேண்டாம், எங்கும் போக வேண்டாம்; மனத்தில் ஒரு திருப்பம், புத்தியின் விழிப்பு, உணர்வில் ஒரு மாற்றம் —

*இதுதான் தேவை. விழிப்புற்ற இத்தகைய உணர்வுடன் செய்யப்படுகின்ற சாதாரண வேலைகளும் கடமைகளும்கூட ஆன்மீக சாதனைகளாகிவிடுகின்றன; இறைவனை நம்மில் எழுந்தருளச் செய்கின்றன என்று கீதை போதிக்கிறது. புத்தியை எப்படி விழித்தெழச் செய்வது, விழிப்புற்ற உணர்வுடன் எப்படி வேலை செய்வது என்பதைப்படிப்படியாக விளக்கி ஒரு வாழ்க்கை வழிகாட்டியாகத் திகழ்கிறது கீதை.*

*கீதையின் 700 சுலோகங்களும் 18 அத்தியாயங்களாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் அத்தியாயமும் யோகம் என்று அழைக்கப்படுகிறது.*

யோகம் என்றால் என்ன?

*பரிணாமச் சங்கிலியில் கடைசிக்கண்ணியாக நிற்கிறான் மனிதன். உடலின் பரிணாமம் மனிதப் பிறவியுடன் நின்றுவிடுகிறது. ஆனால் மனத்தின் பக்குவத்தன்மை, உணர்வின்*(consciousness) *விரிவு தொடர்கிறது. இந்தப் பக்குவமும் விரிவும்தான் மனிதனை மனிதனிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. மனத்தைப் பக்குவப்படுத்தவும், உணர்வை விரித்து அதன் எல்லைகளைத் தொடவும் உதவுவதே யோகம். யோகம் நம்மை இணைக்கிறது — நம்மை நம்முடன் இணைக்கிறது, நம்மை இயற்கையுடன் இணைக்கிறது, நம்மை இறைவனுடன் இணைக்கிறது. இந்த மூன்று இணைதல்களும் உணர்வின் விரிவில் மூன்று முக்கியக் கட்டங்களாகும். கீதையின் யோகங்கள் படிப்படியாக இதனைப் போதிக்கின்றன.*

## *1. நாம் நம்முடன் இணைதல்: புத்தியோகம்*

*சாதாரணமாக நாம் ஒன்றைச் செய்ய முயலும்போது நமது மனம் வேறு திசையை நோக்கி அலைபாயும். ஆன்மீகம், தெய்வீகம் என்றெல்லாம் வரும்போது இதனை இன்னும் தெளிவாக உணர முடியும். உணர்வு, ஆன்மீகம், தெய்வீகம் என்றெல்லாம் ஒரு புதிய வாழ்க்கை முறையைத் தொடங்க முயற்சிக்கின்ற யாரும் முதலில் சந்திப்பது*

*மனக்குழப்பங்களைத்தான் என்று கூறுகிறார் மாணிக்க வாசகப் பெருமான்.*[1] *ஜபம், தியானம் என்று அமரும்போது மனம் எவ்வளவு எதிர்க்கிறது என்பது நம்மில் பலரும் அறிந்த ஒன்று. இந்த நிலை மாறி மனம் நமக்குத் துணை செய்ய வேண்டுமானால் மனம் வசப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மனத்தை எப்படி வசப்படுத்துவது? மனத்தை மனத்தால் வெல்வது சாத்தியமல்ல. மனத்தை வெல்வதற்கு அதைவிட ஆற்றல் வாய்ந்த ஒன்று வேண்டும். அதுவே புத்தி.*

*புத்தி என்பது என்ன?*

*கற்றறிவு, கேட்டறிவு போன்ற எந்தப் புற உபகரணங் களின் துணையும் இன்றி உணர்வின் ஆழங்களிலிருந்து எழுகின்ற உள்ளுணர்வு இது. இந்த உள்ளுணர்வு விழிக்கப் பெற்றவர்களே படைப்பாளிகளாக இருந்தார்கள். கல்வி, விஞ்ஞானம், கலை, மதம் என்று எந்தத் துறையை எடுத் தாலும் அவற்றின் உன்னத சிகரங்களுக்கான வாசலாகத் திகழ்கிறது உள்ளுணர்வு. இந்த உள்ளுணர்வே சாஸ்திரங் களில் புத்தி,* ***தீ:****, இதயத் தாமரை, ஞானக் கண், நெற்றிக் கண் என்றெல்லாம் பேசப்படுகிறது. இந்த உள்ளுணர்வு விழிப்பதையே புத்தியோகம் என்று கீதை கூறுகிறது.*

*சாதாரண புலன்களால் இறைவனை அறிய முடியாது (11.8); எனவே அர்ஜுனனுக்கு புத்தியோகத்தைத் தருவதாக (10.10) ஸ்ரீபகவான் குறிப்பிடுகிறார்.*

*இதயத் தூய்மையாலும், பிரார்த்தனையாலும், காயத்ரி போன்ற மந்திர ஜபங்களாலும் புத்தி விழிப்படைகிறது. புத்தி விழிப்புற்றவன் தன் இதயத்தில் பேரொளியைக் காண்கிறான்; அதனால் அவனது அறியாமை அகல்கிறது (10.11). தனது பாதை எது என்று தெளிவாக அறிந்து அதில் அவன் செல்கிறான்.*

---

*1. தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி*
*முனிவிலாததோர் பொருளது கருதலும்*
*ஆறுகோடி மாயாசக்திகள்*
*வேறுவேறு தம் வேலைகள் தொடங்கின.*
*—கீர்த்தித் திருவகவல், திருவாசகம்*

*'விழிப்படைந்த புத்தியைத் தேரோட்டியாகக் கொண்டவனின் பயணமே தனது லட்சியத்தை அடைகிறது; அவன் இறைவனை அடைகிறான். விழிப்படையாத புத்தியைத் தேரோட்டியாகக் கொண்டவனின் பயணம் லட்சியத்தை அடைவதில்லை; அவன் உலகியலில் உழல்கிறான்' என்று இதனை விளக்குகிறது கட உபநிஷதம் (1.3.7–9).*

*இவ்வாறு புத்தி விழித்தெழும்போது மனம் நமது கட்டிற்குள் வருகிறது; நமது சொல், செயல் எல்லாம் ஒருங்கிணைந்து விடுகின்றன; அதாவது, நாம் நம்முடன் இணைகிறோம். இதன்பிறகு நாம் எதைச் செய்தாலும் அது வெற்றி பெறுகிறது.*

### *2. நாம் இயற்கையுடன் இணைதல்: வேள்விச் சக்கரம்*

*இயற்கை என்று சொல்லும்போது ஜடப் பிரபஞ்சத்தை மட்டும் குறிப்பிடவில்லை. நம்மைச் சுற்றி வாழும் உயிரினங்கள், குறிப்பாக மனிதர்கள் வாழ்கின்ற சமுதாயம் இதில் முக்கியமான ஒன்று. நாம் தனிநபர் அல்ல. நம் ஒருவருக்காக மட்டும் இந்த உலகம் இயங்கவில்லை. தாய், தந்தை, கணவன், மனைவி, குழந்தை, நண்பர், உறவினர், அலுவலகம் என்று நம் ஒவ்வொருவரின் வாழ்வும் பிறருடைய வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது. நமது ஒவ்வொரு செயலும், ஏன், எண்ணமும்கூட பிறரைப் பாதிக்கிறது. பிறருடன் நமது வாழ்க்கை இயைபாக இருப்பது யோகத்தின் அடுத்த படியாகும். இதன் அடிப்படையே வேள்விச் சக்கரம்.*

*'உணவிலிருந்து உயிர்கள் உண்டாகின்றன. உணவு மழையிலிருந்து உண்டாகிறது. மழை வேள்வியிலிருந்து உண்டாகிறது. வேள்வி செயல்களிலிருந்து உண்டாகிறது'— இதுவே வேள்விச் சக்கரம்(3.14-15). நமது செயல்கள் எவ்வாறு அமைய வேண்டும்?' வேள்வியாக. இதனை 3.11–13 மற்றும் 4.24–30 விளக்குகிறது. நமது வாழ்க்கையை இவ்வாறு ஒரு வேள்வியாக மாற்றிக் கொள்வதன்மூலம் நாம் சமுதாயத்துடனும், இயற்கையுடனும் இணைகிறோம்.*

## *3. நாம் இறைவனுடன் இணைதல்: சரணாகதி*

*நமது வாழ்க்கை நம்முடன் இணைந்துவிட்டது, நமது வாழ்க்கை இயற்கையுடன் இணைந்துவிட்டது. அடுத்தது இறைவனுடன் இணைவது. இதன் அடிப்படையாக கீதை கூறுவது சரணாகதி.*

*சரணாகதி என்றால் இறைவனைச் சரணடைந்து வாழ்தல். கேட்பதற்கு மிக எளிதாகத் தோன்றுகின்ற இது உண்மையில் மிகவும் கடினமானதாகும். சரணாகதி என்றால் சாதனைகள் எதுவும் செய்யாமல் மனம் போனபடி வாழ்வது என்பதல்ல. தனக்கென எதையும் செய்யாமல், இறைவனால் அளிக்கப்படுவதை எந்த எதிர்ப்போ மறுப்போ இன்றி அப்படியே ஏற்றுக்கொள்கின்ற நிலை இது. இது மிகவும் கடினமான ஒன்று என்பது சொல்லாமலே விளங்கும். தன்னுடன் இணைந்த அதாவது தனக்குள்ளே குழப்பங்கள் இல்லாத, இயற்கையுடன் இணைந்த ஒருவரால் மட்டுமே இறைவனை நாடி அவரைச் சரணடைய முடியும். இதனால்தான் சரணாகதி என்பதை கீதையின் இறுதியில் (18.66) வைக்கிறார் ஸ்ரீகிருஷ்ணர்.*

*நாம் மேலே கண்ட மூன்று கருத்துக்களும் பகவத் கீதையைப் புரிந்துகொள்வதற்கான மூன்று அடிப்படைகள் ஆகும்.*

### கீதையின் செய்தி: கடமைமூலம் கடவுள்

*மோட்சம் அல்லது முக்தியே வாழ்க்கையின் லட்சியம். இதை போதிப்பதால் கீதை 'மோட்ச சாஸ்திரம்' எனப்படு கிறது. முக்தியை அடைய 'யோகம்' என்பதை வழியாக வைப்பதால் 'யோக சாஸ்திரம்' எனப்படுகிறது.*

*யோகம் என்றால் என்ன? இணைதல். இது மூன்று படி களாக அமைந்திருப்பதைக் கண்டோம். நாம் நம்முடன் அதாவது நமது மனத்துடன் இணைய வேண்டும், நாம் இயற்கையுடன் இணைய வேண்டும், நாம் இறைவனுடன் இணைய வேண்டும். இதற்கான வழியைச் சொல்கின்ற*

இடத்தில்தான் கீதை மற்ற சாஸ்திரங்களிலிருந்து தனித்து நிற்கிறது. பொதுவாக கடமைகளை விட்டுவிட்டு அல்லது கடமைகளை நிறைவேற்றி முடித்தபிறகு இந்த முயற்சிகளில் இறங்குமாறுதான் சாஸ்திரங்கள் கூறும். கீதை அதைச் சொல்லவில்லை.

அப்படியானால் கீதையின் பாதை என்ன? கீதையின் செய்தி என்ன?

கடமைமூலம் கடவுள்.

கடமையா கடவுளா? கடமையை விட்டுவிட்டு கடவுளா? கடமை முதலா, கடவுள் முதலா? போன்ற கேள்விகள் அனைத்திற்கும் 'கடமைமூலம் கடவுள்' (18.46) என்ற பதிலினால் ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைக்கிறது கீதை. எந்தக் கடமையையும் விட வேண்டாம்? கடமையை உரிய முறையில் செய்தாலே அது நம்மைக் கடவுளிடம் சேர்க்கும் என்பது ஸ்ரீகிருஷ்ணர் அளித்த ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவம்.[1]

அந்த உரிய முறை எது?

அதுவே பற்றின்மை என்ற மாபெரும் மந்திரம். 'நமது முழு ஆற்றலுடன் இடைவிடாமல் செயல்புரிய வேண்டும்; நாம் செய்யும் செயல் எதுவாயினும் நமது முழு மனத்தையும் அதில் செலுத்த வேண்டும்; அதேவேளையில் அதில் பற்றுக் கொள்ளவும் கூடாது. அதாவது செயல்புரிவதிலிருந்து வேறு எதன் காரணமாகவும் நமது மனம் விலகிச் செல்ல இடம் கொடுக்கக் கூடாது. அதேவேளையில் நாம் விரும்பினால் செயலை விட்டுவிடும் திறமையும் பெற்றிருக்க வேண்டும்'[2] என்று இதனை விளக்குகிறார் சுவாமி விவேகானந்தர்.

இந்தத் திறமையைப் பெறுவது எப்படி?

---

1. தாய், தந்தை, கணவன், மனைவி, பிள்ளைகள் என்று குறிப்பிட்ட சிலருக்கான கடமைகளை இங்கே நாம் குறிப்பிடவில்லை. செயல்கள், வேலைகள் என்ற பொதுவானவற்றையே கடமை என்ற சொல்லால் அழைக்கிறோம்.

2. ஞான தீபம், 1.212.

இதற்கு மூன்று வழிகளைக் கூறுகிறது கீதை.

### 1. கடமைகளை வழிபாடாகச் செய்தல்

செய்கின்ற செயல்கள் அனைத்தையும், கடமைகள் அனைத்தையும் ஒரு வழிபாடாக, இறைவனுக்கு அர்ச்சனை யாகச் செய்யலாம் (3.30, 18.46). அலுவலகப் பணியானா லும், வீட்டு வேலையானாலும் பூஜையானாலும் அதனை இறைவனுக்குச் சமர்ப்பணமாகச் செய்யும்போது அந்த வேலை நம்மீது ஒரு பந்தத்தை ஏற்படுத்துவதில்லை. அனைத்து செயல்களுக்கும் காரணமாக இருப்பவர் இறைவன், எனவே எல்லா செயல்களும் நம்மை அவரிடம் சேர்க்கவே செய்யும். நாம் செய்கின்ற செயல் எதுவானாலும் அதை இறைவனுக்கு அர்ச்சனையாக, வழிபாடாகச் செய்தால் அது நம்மை இறைவனிடம் சேர்க்கும். இந்தக் கருத்திற்குப் புதியதொரு மெருகூட்டியவர் சுவாமி விவேகானந்தர். அவர் ஆரம்பித்த ராமகிருஷ்ண மிஷன் இந்தக் கருத்தை அடிப் படையாகக்கொண்டே இயங்கி வருகிறது. பால கங்காதர திலகர், மகாத்மா காந்தி போன்றோரும் இந்தக் கருத்தை வெகுவாகச் செயல்படுத்தினர்.

### 2. கடமைகளை யோகமாகச் செய்தல்

கடமைகளை, நமது அன்றாடச் செயல்களை யோக மாகச் செய்யலாம். மனத்தில் எழுகின்ற எண்ண அலை களை அடக்குவதற்கான ஒரு வழி யோகம். கடமைகளுக்கு நடுவே வாழ்ந்தபடியே யோகம் பழகலாம் என்று காட்டினார் ஸ்ரீபகவான். மனத்தை அலைக்கழித்து எண்ண அலைகளை ஏற்படுத்துபவை ஆசைகள். பற்றின்றி வேலை செய்ய கற்றுக் கொண்டால் ஆசைகள் நம்மை ஒன்றும் செய்யாது; தீவிர செயல்பாடுகளுக்கு நடுவிலும் மனம் அமைதியாக இருக்க முடியும். எனவே மனம் அமைதியாக இருக்க வேண்டு மானால் கடமைகளிலிருந்து விடுபட வேண்டும் என்ற தேவை இல்லை; பற்றின்றி வேலை செய்தால் வேலைகளுக்கு நடுவிலும் அமைதியான மனத்துடன் இருக்க முடியும்.

வேலை அல்லது கர்மத்தின்மூலம் செய்யப்படுகின்ற யோகம் கர்மயோகம். அல்லது, யோகமாகச் செய்யப்படும் கர்மம் கர்மயோகம். 4 (19–23) & 5 (8–11)-ஆம் அத்தியாயங் களில் இதனை விளக்குகிறார் ஸ்ரீபகவான்.

கர்மயோகத்தினால் ஒருவன் தன்னை வென்றவன் ஆகிறான். எதிரான, மனத்தை அலைக்கழிக்கின்ற சூழ் நிலைகள் ஆகியவற்றிலும் அவனால் சலனமின்றி தனது கடமைகளை மிகச் சிறப்பாகச் செய்ய முடிகிறது. இந்தக் கருத்தையும் மீண்டும் பிரபலமாக்கியவர் சுவாமி விவேகானந்தர்.

## 3. கடமைகளை வேள்வியாகச் செய்தல்

அக்கினி வளர்த்துச் செய்கின்ற வேள்விகளின் மூலமாக ஒருவன் சொர்க்கத்தை அடைகிறான் என்ற கருத்து வேத காலத் தில் நிலவியது. ஆனால் உபநிஷத முனிவர்கள் பலரும், கபிலர் போன்ற சிந்தனையாளர்களும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அக்கினியை வளர்த்து, சில பொருட்களை அதில் சமர்ப்பித்துச் செய்கின்ற ஒரு புறக் கிரியை ஒரு மேலான நிலையைத் தரும் என்பது ஏற்புடையதாக இல்லை என்று அவர்கள் நிராகரித்துவிட்டனர். ஆனால் ஸ்ரீபகவான் அவ்வாறு நிராகரிக்காமல், வேள்விக் கருத்தை ஏற்றுக் கொண்டு அதன் எல்லைகளை விரிவுபடுத்தினார். அதாவது, வேள்வி என்ற ஒன்றைத் தனியாகச் செய்வதற்கு பதிலாக வாழ்க்கையையே ஒரு வேள்வியாக மாற்றுமாறு கூறினார்.

இதன் பொருள் என்ன?

சற்றே அமைதியாக நின்று இந்த உலகை ஒருமுறை பார்க்கத் தெரிந்த யாருக்கும் இந்த உலகின் இயக்கம் ஒரு மாபெரும் வேள்வியாக நடைபெற்றுக் கொண்டிருப்பது தெரிய வரும்.

பிறக்கின்ற அனைத்தும் இறக்கின்றன. மலர்கின்ற அனைத்தும் வாடுகின்றன. எழுகின்ற அனைத்தும்

வீழ்கின்றன; தோன்றுகின்ற அனைத்தும் மறைகின்றன. இறப்பவை புதியவை பிறப்பதற்குக் காரணமாகின்றன; வாடுபவை புதியவை மலர்வதற்குக் காரணமாகின்றன; வீழ்பவை புதியவை எழுவதற்குக் காரணமாகின்றன; மறைபவை புதியவை தோன்றுவதற்குக் காரணமாகின்றன. இந்த மாபெரும் சுழற்சி எதைக் காட்டுகிறது? இங்கே மாபெரும் வேள்வி ஒன்று நடைபெறுகிறது என்பதைத்தானே!

நம்மிடம் கொடுக்கப்படுகின்ற, அல்லது நாம் உலகிலிருந்து எடுத்துக்கொள்கின்ற அனைத்தும் திருப்பிக் கொடுப்பதற்காகவே என்ற இந்த வேள்வி–நியதியைப் புரிந்துகொண்டு வாழ முயற்சித்தால் வாழ்க்கை இன்பமாக அமையும்.

நாம் இந்தப் பிரபஞ்சத்தின் ஓர் அங்கம். இங்கே நாம் வாழ வேண்டுமானால், நாம் இங்கிருந்து எடுப்பதைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். உணவு, தண்ணீர், ஆக்சிஜன் முதலியவற்றைப் பெறுகிறோம்; கார்பன் டை ஆக்சைடு, கழிவுப் பொருட்கள் என்று அதனைத் திருப்பிக் கொடுக்கிறோம். அறிவைப் பெறுகிறோம், அதனைச் சரியான துறையில் பயன்படுத்துவதன்மூலம் திருப்பிக் கொடுக்கிறோம். ஒவ்வொரு நிலையிலும் இவ்வாறு சிலவற்றை எடுக்கிறோம், சிலவற்றைத் திருப்பிக் கொடுக்கிறோம். சாதாரண மனிதர்கள் ஒவ்வொருவரும் இந்த நியதியைப் பின்பற்றுவதன்மூலம் இந்த வேள்வியில் பங்கெடுத்தேயாக வேண்டும்.

ஆனால் அறியாமை காரணமாக மனிதன் தானாக முன்வந்து, உணர்வுபூர்வமாக அதில் பங்கெடுக்க மறுக்கிறான். சுயநலமிக்க இந்தப் போக்குதான் அவனை பந்தத்தில் ஆழ்த்தி மீண்டும்மீண்டும் பிறவித்தளையில் சுழலச் செய்கிறது. எனவே இந்த வேள்வியில் உணர்வுபூர்வமாக பங்கெடுக்கும் விதத்தில் நமது கடமைகளைச் செய்ய வேண்டும். இதனையே கீதையின் 3.9–23 சுலோகங்கள் தெரிவிக்கின்றன. மேலும் நமது உடம்பு மற்றும் மனச்

*செயல்பாடுகளையே வேள்வியாகச் செய்வதுபற்றி 4.24–30 சுலோகங்கள் கூறுகின்றன.*

*இவ்வாறு கடமைகளிலிருந்து விலகாமலேயே நம் வாழ்வில் கடவுளை நிறைப்பதற்கான ஒரு செய்தியைக் காலத்திற்கு ஏற்ற வகையில் கீதை நமக்குத் தருகிறது.*

## கீதையின் செய்தி நம் ஒவ்வொருவருக்கும் உரியது

*கீதையின் செய்தியில், ஸ்ரீபகவான் காட்டும் புதிய வாழ்க்கைத் தத்துவத்தில், கடமைமூலம் கடவுள் என்ற கருத்தின் சிறப்பு என்ன?*

*அது நம் ஒவ்வொருவருக்கும் உரியது என்பதுதான். நாம் மாணவனாக, ஆசிரியராக, அலுவலகத்தில் பணி செய்ப வராக, தொழிற்சாலையில் வேலை செய்பவராக, கூலி வேலை செய்பவராக , டாக்டராக, மீனவராக, செருப்பு தைப்பவராக, இல்லத்தரசியாக, பூஜாரியாக யாராக இருந் தாலும் கீதையின் செய்தி நம் ஒவ்வொருவருக்கும் உரியது. சுருக்கமாகச் சொல்வதானால், வேலை செய்கின்ற ஒவ் வொருவருக்கும் உரியது கீதையின் செய்தி.*

*வேலைகள், கடமைகள் எப்படி இறைநிலையைத் தருகின்றன?*

*பொதுவாக நாம் நமது வாழ்க்கையை அலுவலகம், வீடு, கோயில், பொழுது போக்குமிடம் என்று பிரித்துக் காண்கிறோம். ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வொரு விதமான மனநிலையில் செயல்படுகிறோம். 'இது யாரோ ஒரு வருடைய வேலை, நான் பணத்திற்காக வேலை செய்கிறேன்' என்ற மனநிலையில் அலுவலகத்தில் செயல்படுகிறோம். 'இது எனது கடமை. பெற்றோருக்கு, மனைவிக்கு, கணவனுக்கு, குழந்தைகளுக்குத் தேவையானவற்றை நான் செய்தேயாக வேண்டும்' என்ற மனநிலையில் வீட்டில் செயல்படுகிறோம். பொழுதுபோக்குமிடம் என்று வந்தால், 'வாரத்தில் ஆறு நாட்கள், ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் வேலை செய்ய வேண்டும். பின்னர் எப்படியாவது நேரம்*

*சம்பாதித்துக் கொண்டு சுதந்திரமாக நான் விரும்புவது போல் பொழுதுபோக்க வேண்டும், இன்பம் அனுபவிக்க வேண்டும்' என்ற மனநிலையில் செயல்படுகிறோம்.*

*இத்தகைய போக்கு மனத்தைப் பிளவுபடுத்துகிறது; இன்றைய மனப்பிரச்சினைகள் பலவற்றிற்கும் இதுவே காரணமாக உள்ளது. இதிலிருந்து விடுபட வேண்டுமானால் இவ்வாறு மனத்தைப் பிரிவுபடுத்துவதை நிறுத்த வேண்டும். மனம் எப்போதும் ஒரே நிலையில் செயல்படுவதற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அதற்குத் துணையாக வருகிறது கீதையின் செய்தி.*

*எல்லா வேலைகளும் நம்முடையவை; நாம் நம் முடன் இணைவதற்கு, சமுதாயத்துடன் இணைவதற்கு, இறைவனுடன் இணைவதற்கு உதவுபவை என்ற எண்ணத் துடன் செயல்படும்போது மனம் ஒரே நிலையில் இருக் கிறது. மனம் பிளவுபடுவது தவிர்க்கப்படுவதால் அதன் ஆற்றல் அதிகரிக்கிறது; பற்றின்றி பணி செய்வது எளிதா கின்றது. அந்த நிலையில் நாம் செய்கின்ற ஒவ்வொரு வேலையும் நாம் இறைவனுடன் இணைவதற்கான ஓர் ஆன்மீக சாதனையாக ஆகிவிடுகிறது. 'வழிபாடுகள் மட்டு மின்றி, எல்லாவகையான செயல்களும், எல்லாவகையான போராட்டங்களும், எல்லாவகையான படைப்புகளும் இறை யனுபூதிக்கான பாதைகளாக அமைந்துவிடும். பிறகு ஆன்மீகத்திற்கும் உலகியலுக்கும் வேறுபாடில்லை. உழைப்பே பிரார்த்தனை. வெற்றிகொள்வதே துறவு. வாழ்வே ஆன்மீகம். சம்பாதிப்பதும் பாதுகாப்பதும், துறப்பதையும் தவிர்ப்பதையும் போன்ற ஒரு சாதனையே... மனிதன் ஆண்ட வனை அடைய முனிவரின் குகையும், கோயிலின் வாசலும் எப்படி உண்மையான, ஏற்ற இடங்களோ, அப்படியே தொழிற்சாலைகளும், படிப்பறைகளும், தோட்ட மும், வயல்வெளியும்...'*[1] *என்று எழுதுகிறார் சகோதரி நிவேதிதை.*

---

*1. ஞான தீபம், 1.* xxi.

*மகாபாரதத்தில் வருகின்ற தரும வியாதன், இல்லத்தரசி ஆகிய இருவரின் கதையும் கீதையின் இந்தச் செய்திக்கு உன்னத உதாரணங்களாகத் திகழ்கின்றன. கசாப்புத் தொழில் செய்பவன் தரும வியாதன். கணவனுக்கும் பெற்றோருக்கும் தனது கடமைகளை மட்டும் செய்து வந்தவள் இல்லத்தரசி. இருவரும் கடமைகளைச் செய்ததன்மூலமே இறை நிலையை அடைந்தவர்கள். தன் மன ஆற்றலைக் கண்டு வியந்த துறவியிடம் அந்த இல்லத்தரசி கூறினாள்: 'மகனே! எனக்கு உன்னைப்போல் யோகமோ தவமோ எதுவும் தெரியாது. அன்றாடம் என் கடமைகளைச் செய்துகொண் டிருக்கின்ற ஒரு சாதாரணப் பெண் நான். என் கணவர் நோயுற்றிருக்கிறார். நான் அவருக்குப் பணிவிடை செய் கிறேன். கடமைகளை வாழ்நாள் முழுவதும் மனப்பூர்வமாகச் செய்துவருகிறேன். திருமணத்திற்குமுன் பெற்றோருக்கு என் கடமையைச் செய்தேன். இப்போது திருமணம் முடிந்து விட்டது. எனவே கணவருக்கு என் கடமைகளைச் செய்து வருகிறேன். என் கடமைகளைச் செய்து வந்ததாலே என் ஞானக் கண் திறந்துவிட்டது.'*

*அந்தத் துறவி வியாதனிடம் சென்று அவன் செய்யும் தொழில் இழிந்ததாயிற்றே என்று கேட்டார். அதற்கு அவன், 'மகனே, கடமைகளுள் எதுவும் இழிந்ததோ கேவலமானதோ இல்லை. என்னுடைய பிறப்பு, கசாப்புத் தொழில் செய்யும் இந்தச் சூழ்நிலையில் என்னை வைத்திருக்கிறது. எனக்குப் பற்றேதும் இல்லை. ஓர் இல்லறத்தானாக என் கடமைகளைச் செய்ய முயற்சிக்கிறேன். உங்கள் யோகம் எனக்குத் தெரியாது, நான் துறவியாகவில்லை. வீட்டைத் துறந்து காட்டிற்குப் போகவில்லை. என்னிடம் நீங்கள் பார்ப்பவை, கேட்பவை எல்லாம், எனது நிலைக்கு உரிய கடமைகளைப் பற்றின்றிச் செய்ததால் கிடைத்ததாகும்' என்றான்.*[1] *துறவி அவனிடம் ஆன்மாவைப் பற்றியும் கடவுளைப் பற்றியும் கேட்ட கேள்வி களுக்கு அவன் அளித்த விளக்கம் 'வியாத கீதை' என்ற*


---

*1. விரிவாக அறிய, ஞான தீபம், 1.114–115 பார்க்க.*

பெயரில் மகாபாரதத்தில் உள்ளது. வேதாந்தத்தின் மிக உயர்ந்த விளக்கங்களுள் ஒன்று இந்த கீதை.

இந்தச் செய்தியில் மற்றொரு முக்கியக் கருத்தும் உள்ளது. இந்தச் செய்தி, வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் பொருளுடையது ஆக்குகிறது. ஒவ்வொரு வேலையையும் ஓர் உயர்ந்த லட்சியத்திற்காகச் செய்கிறோம்— ஒரு வழிபாடாக, ஒரு யோகமாக, ஒரு வேள்வியாகச் செய்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு கணமும் உணர்வுபூர்வமாக வாழ்வதால் எந்தச் சூழ்நிலையும் நம்மைப் பதற்றத்திற்கு உள்ளாக்குவதில்லை; சூழ்நிலை எப்போதும் நம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது. எந்தப் பிரச்சினை வந்தாலும் நிலைகுலையாமல் வாழ்க்கையை எதிர்கொள்ள ஸ்ரீகிருஷ்ணரின் இந்த வாழ்க்கைத் தத்துவம் இவ்வாறு நமக்குத் துணை செய்கிறது.

‘கடமைமூலம் கடவுள்’ என்ற இந்த அற்புதமான செய்தியை நாம் செயல்படுத்துவதற்கு பல்வேறு வழிகளை, பல்வேறு விதங்களில் தெரிவிக்கிறது கீதை. கீதையை இந்தக் கண்ணோட்டத்தில் படிக்கும்போது கீதை நமக்கு ஒரு புதிய செய்தியைத் தரும்; வாழ்க்கையின் ஒரு புதிய கோணம் நமக்குத் தெரியவரும்.



# 4 கடமைகளை வேள்வியாகச் செய்



'செயல்களை வேள்வியாகச் செய்கின்ற ஒருவனின்
எல்லா செயல்களும் கரைந்துவிடுகின்றன.' -23

# 4

# ஞானகர்ம சன்னியாச யோகம்

## கடமைகளை வேள்வியாகச் செய்

ஞானத்தின்மூலமாக கர்மங்களை விடுவது அதாவது அறிவின்மூலமாக செயல்களை விடுவது ஞானகர்ம சன்னியாசம். இதன் பொருள் என்ன? செயல்களைச் செய்தும் செய்யாதவனாக இருப்பது, அதாவது, செயலில் செயலின்மையைக் காண்பது. தமது வாழ்க்கையை இதற்கு உதாரணம் காட்டி விளக்குகிறார் ஸ்ரீபகவான்.

அந்த நிலையை அடைவது எப்படி? செயல்களை வேள்வியாகச் செய்வதன்மூலம். உண்பது, படிப்பது என்றல்ல, இன்ப நுகர்ச்சியைக்கூட ஒரு வேள்வியாகச் செய்யு மாறு கூறுகிறார் ஸ்ரீபகவான்(26). வேலைகளை வேள்வியாகச் செய்வதன்மூலம் கர்மத்தளையிலிருந்து விடுபடலாம் என்கிறார் அவர். ஒரு செயலால் நாம் பந்தத்திற்கு உள்ளாக வில்லை என்றால் அந்தச் செயலை நாம் செய்யாததுபோல் தானே!

இவ்வாறு செயல்களைச் செய்தும் செய்யாதவனாக இருப்பதே ஞானகர்ம சன்னியாசம், அதாவது, அறிவின் மூலமாக செயல்களைத் துறப்பது, செயலில் செயலின்மை யைக் காண்பது.

அவதாரக் கருத்து, ஞானத்தின் மகிமை போன்றவையும் இங்கே பேசப்படுகிறது.

**யோகங்களின் பழமை: 1–3**

**श्रीभगवानुवाच**

**इमं विवस्वते योगं प्रोक्तवानहमव्ययम् ।**
**विवस्वान् मनवे प्राह मनुरिक्ष्वाकवेऽब्रवीत् ॥ १ ॥**

ஸ்ரீ**பக**வானுவாச

இமம் விவஸ்வதே யோ**க**ம் ப்ரோக்தவானஹமவ்யயம் |
விவஸ்வான் மனவே ப்ராஹ மனுரிக்ஷ்வாகவேऽ**ப்**ரவீத் || 1 ||

அவ்யயம் – *அழிவற்ற;* இமம் – *இந்த;* யோ**க**ம் – *யோகத்தை;* அஹம் – *நான்;* விவஸ்வதே – *விவஸ்வானுக்கு;* ப்ரோக்தவான் – *சொன்னேன்;* விவஸ்வான் – *விவஸ்வான்;* மனவே – *மனுவுக்கு;* ப்ராஹ – *சொன்னார்;* மனு: – *மனு;* இக்ஷ்வாகவே – *இக்ஷ்வாகுவிற்கு;* அ**ப்**ரவீத் – *சொன்னார்.*

**ஸ்ரீபகவான் சொன்னது**

**1. அழிவற்ற இந்த யோகத்தை நான் விவஸ்வானுக்குச் சொன்னேன். விவஸ்வான் மனுவுக்குச் சொன்னார். மனு இக்ஷ்வாகுவிற்குச் சொன்னார்.**

*ஸ்ரீபகவான் தம்மை வசுதேவனுக்கும் தேவகிக்கும் பிறந்த ஒருவராகக் கொள்ளாமல், முழுமுதற் பொருளுடன் ஒன்றுபட்டவராக இங்கே பேசுகிறார். விவஸ்வான் என்பது சூரியனுடைய பெயர். முதலில் படைக்கப்பட்ட மனிதர் மனு. மனுவிடமிருந்து தோன்றியதாலேயே மனிதன் (மானவ:) என்ற பெயர் வந்தது. மனுவின் மகன் இக்ஷ்வாகு. இவர் சூரிய குலத்தின் முதல் அரசனும் ஆவார். யோகங்கள், அதாவது இறைவனை அடைவதற்கான பல்வேறு பாதைகள் யாவும் அவரிடமிருந்தே தோன்றி வந்துள்ளன என்பதை ஸ்ரீபகவான் இங்கே சுட்டிக்காட்டுகிறார்.*

**एवं परम्पराप्राप्तम् इमं राजर्षयो विदुः ।**
**स कालेनेह महता योगो नष्टः परंतप ॥ २ ॥**

ஏவம் பரம்பரா ப்ராப்தம் இமம் ராஜர்ஷயோ வி**து:** |
ஸ காலேனேஹ மஹதா யோ**கோ** நஷ்ட்ட: பரந்தப || 2 ||

*பரந்தப – எதிரிகளை வாட்டுபவனே;* ஏவம் – *இவ்வாறு;* பரம்பரா ப்ராப்தம் – *பரம்பரையாக வந்த;* இமம் – *இந்த யோகத்தை;* ராஜர்ஷய: – *ராஜரிஷிகள்;* வி**து:** – *அறிந்திருந்தார்கள்;* மஹதா காலேன – *நீண்ட காலம் ஆகிவிட்டதால்;* ஸ: – *அந்த;* யோ**க:** – *யோகம்;* இஹ – *இங்கே;* நஷ்ட்ட: – *சீரழிந்துவிட்டது.*

**2. எதிரிகளை வாட்டுபவனே! இவ்வாறு பரம்பரையாக வந்த இந்த யோகத்தை ராஜரிஷிகள் அறிந்திருந்தார்கள். நீண்ட காலம் ஆகிவிட்டதால் இப்போது அந்த யோகம் சீரழிந்துவிட்டது.**

'உன்னிடம் சொல்லப்பட்ட இந்த யோகம் உன்னைப் போரில் உற்சாகப் படுத்துவதற்காகச் சொல்லப்பட்டது என்று நினைக்காதே'[1] என்று ஸ்ரீபகவான் அறிவுறுத்துவதாகக் கொள்கிறார் ஸ்ரீராமானுஜர். அதற்கு மிகவும் முன்னாலேயே அதாவது படைப்பின் ஆரம்பத்திலேயே இந்த யோகங்கள் அதாவது கர்மயோகம், ஞானயோகம் போன்றவை போதிக்கப்பட்டுள்ளன; ராஜரிஷிகள்மூலம் பரம்பரை பரம்பரையாக வந்துள்ளன. ராஜரிஷிகள் வாழ்க்கையைத் துறக்காதவர்கள். பூரண ஞானிகளாகவும் செயல்வீரர்களாகவும் திகழ்ந்தவர்கள்.

முதல் சுலோகம் இந்த யோகம் 'அழிவற்றது' (அவ்யயம்) என்றது; இந்த சுலோகம் யோகம் 'சீரழிந்து விட்டது' (நஷ்ட்ட:) என்கிறது. இதனை ஸ்ரீசங்கரர் 'இந்த யோகம் அழிவற்றது என்றால் அழிவற்ற பலனைத் தரக் கூடியது'[2] என்று பொருள் கொள்கிறார். பாதை என்றால்

---

1. *தவ உ*தி*த: யோக:* ஸ கேவலம் யுத்த ப்ரோத்ஸாஹனாய இதானீம் உதித இதி ந மந்தவ்யம் |
2. *அவ்யயம் அவ்யய ஃபலத்வாத்* |

*அதில் காலப்போக்கில் சீர்குலைவுகளும் மாற்றங்களும் வந்தே தீரும். ஆனால் பாதையை உறுதியாகப் பற்றினால் அழிவற்ற பலன் கிடைக்கும் என்பது கருத்து.*

**स एवायं मया तेऽद्य योगः प्रोक्तः पुरातनः ।**
**भक्तोऽसि मे सखा चेति रहस्यं ह्येतदुत्तमम् ॥ ३ ॥**

ஸ ஏவாயம் மயா தேऽ**த்**ய யோ**க:** ப்ரோக்த: புராதன: |
**ப**க்தோऽஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேத**து**த்தமம் || 3 ||

மே – *என்னுடைய;* **ப**க்த: – *பக்தனாகவும்;* ஸகா ச – *தோழனாகவும்;* அஸி – *இருக்கிறாய்;* இதி – *எனவே;* அயம் – *இந்த;* புராதன: – *பழமை வாய்ந்த;* ஸ: ஏவ யோ**க:** – *அதே யோகம்;* அ**த்**ய – *இன்று;* தே – *உனக்கு;* மயா – *என்னால்;* ப்ரோக்த: – *சொல்லப்பட்டுள்ளது;* ஏதத் – *இது;* உத்தமம் – *மேலானது;* ரஹஸ்யம் ஹி – *ரகசியமானதும்கூட.*

**3. நீ என்னுடைய பக்தனாகவும் தோழனாகவும் இருக்கிறாய். எனவே பழமை வாய்ந்த அதே யோகத்தை இன்று உனக்குச் சொன்னேன். இது மேலானதும் ரகசியமானதும் ஆகும்.**

## அவதார தத்துவம் (4–12)

**अर्जुन उवाच**

**अपरं भवतो जन्म परं जन्म विवस्वतः ।**
**कथमेतद्विजानीयां त्वमादौ प्रोक्तवानिति ॥ ४ ॥**

அர்ஜுன உவாச

அபரம் **ப**வதோ ஜன்ம பரம் ஜன்ம விவஸ்வத: |
கதமேத**த்** விஜானீயாம் த்வமா**தௌ** ப்ரோக்தவானிதி || 4 ||

**ப**வத: – *உனது;* ஜன்ம – *பிறப்பு;* அபரம் – *பிந்தியது;* விவஸ்வத: – *சூரியனுடைய;* ஜன்ம – *பிறப்பு;* பரம் – *முந்தியது;* த்வம் – *நீ;* ஆ**தௌ** – *ஆரம்பத்தில் ;*

ப்ரோக்தவான் இதி ஏதத் – *சொன்னதாகக் கூறியதை;* கதம் – *எப்படி;* விஜானீயாம் – *புரிந்துகொள்வது.*

**அர்ஜுனன் கேட்டது**

**4. உனது பிறப்பு பிந்தியது, சூரியனுடைய பிறப்பு முந்தியது. அவருக்கு நீ சொன்னதாகக் கூறியதை எப்படிப் புரிந்துகொள்வது?**

**श्रीभगवानुवाच**

**बहूनि मे व्यतीतानि जन्मानि तव चार्जुन ।**
**तान्यहं वेद सर्वाणि न त्वं वेत्थ परंतप ॥ ५ ॥**

ஸ்ரீ**பக**வானுவாச

**ப**ஹூனி மே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுன |
தான்யஹம் வே**த** ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப || 5 ||

அர்ஜுன – *அர்ஜுனா;* தவ ச – *உனக்கும்;* மே – *எனக்கும்;* **ப**ஹூனி – *பல;* ஜன்மானி – *பிறவிகள்;* வ்யதீதானி – *கடந்து விட்டன;* பரந்தப – *எதிரிகளை வாட்டுபவனே;* தானி – *அவை;* ஸர்வாணி – *அனைத்தையும்;* அஹம் – *நான்;* வே**த** – *அறிவேன்;* த்வம் – *நீ;* ந வேத்த – *அறிய மாட்டாய்.*

**ஸ்ரீபகவான் சொன்னது**

**5. அர்ஜுனா! உனக்கும் எனக்கும் பல பிறவிகள் கடந்து விட்டன. எதிரிகளை வாட்டுபவனே! நான் அவை அனைத்தையும் அறிவேன்; நீ அறிய மாட்டாய்.**

**அவதாரம் எப்படி நிழ்கிறது?**

**अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन् ।**
**प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया ॥ ६ ॥**

அஜோऽபி ஸன்னவ்யயாத்மா **பூ**தானாமீ**ச்**வரோऽபி ஸன் |
ப்ரக்ருதிம் ஸ்வாம**தி**ஷ்ட்டாய ஸம்**ப**வாம்யாத்மமாயயா || 6 ||

*அஜ: அபி ஸன் – பிறப்பற்றவனாக இருந்தாலும்; அவ்யய ஆத்மா – அழிவற்றவன்;* **பூ***தானாம் – உயிர்களின்; ஈ***ச்***வர: அபி ஸன் – தலைவனாக இருந்தும்; ஸ்வாம் ப்ரக்ருதிம் – சொந்த இயல்பை; அ***தி***ஷ்ட்டாய – வசப் படுத்திக்கொண்டு; ஆத்ம மாயயா – என் மாயையினால்; ஸம்***ப***வாமி – தோன்றுகிறேன்.*

**6. நான் பிறப்பற்றவன், அழிவற்றவன், உயிர்களின் தலைவன். இருந்தாலும் சொந்த இயல்பை வசப்படுத்திக் கொண்டு என் மாயையினால் தோன்றுகிறேன்.**

*அவதாரதத்துவத்தின்*[1] *இரண்டு அடிப்படை உண்மைகள் இங்கே கூறப்படுகின்றன— 1. இறைவனின் இயல்பு; 2. அவதாரம் எப்படி நிகழ்கிறது.*

*பிறப்பு, இறப்பு, வளர்ச்சி போன்ற எல்லைகளுக்கு உட்படாதவர் இறைவன். 'இதுதான் அவரது இயல்பு' என்று எதையும் சுட்டிக்காட்டி அவரை விளக்க முடியாது. அவர் மனிதனாகப் பிறக்கும்போது அந்த இயல்பை வசப்படுத்திக் கொள்கிறார், அதாவது சொந்த இயல்பை மறைத்துக் கொள் கிறார். பிறகு தம்முடைய மாயையால் தம்மை வேறொரு வராகக் காட்டிக் கொள்கிறார். இருக்கின்ற ஒன்றை மறைத்து, அதனை வேறொன்றாகக் காட்டுவது மாயை. மனிதர்களும் மாயை வசப்பட்டே பிறக்கிறார்கள், இறைவனும் மாயை வசப்பட்டே பிறக்கிறார். ஆனால் ஒரேவொரு வித்தியாசம்: மனிதர்கள் மாயையின் கட்டிற்குள் இருக்கிறார்கள், இறைவனின் விஷயத்தில் மாயை அவரது கட்டிற்குள் இருக்கிறது.*

**அவதாரம் எப்போது நிகழ்கிறது?**

**यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।**
**अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥ ७ ॥**

---

*1. கீதை 7.24–30-ம் காண்க.*

**ய*தா*** **ய*தா*** ஹி **த**ர்மஸ்ய **க்**லானிர் **ப**வதி **பா**ரத |
அ**ப்**யுத்தானம**த**ர்மஸ்ய த**தா**த்மானம் ஸ்ருஜாம்யஹம் || 7 ||

*பா*ரத – *பரத குலத்தில் பிறந்தவனே;* ய**தா** ய**தா** – *எப்போதெல்லாம்;* **த**ர்மஸ்ய – *தர்மத்திற்கு;* **க்**லானி: **ப**வதி – *சீர்குலைவும்;* அ**த**ர்மஸ்ய – *அதர்மத்திற்கு;* அ**ப்**யுத்தானம் **ப**வதி – *ஓங்குகிறதோ;* த**தா** ஹி – *அப்போதெல்லாம்;* ஆத்மானம் – *என்னை;* அஹம் – *நான்;* ஸ்ருஜாமி – *பிறப்பித்துக் கொள்கிறேன்.*

**7. பரத குலத்தில் பிறந்தவனே, எப்போதெல்லாம் தர்மம் சீர்குலைந்து அதர்மம் ஓங்குகிறதோ அப்போதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக்கொள்கிறேன்.**

**அவதாரம் ஏன் நிகழ்கிறது?**

**परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।**
**धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥ ८ ॥**

பரித்ராணாய ஸா**தூ**னாம் வினா**சா**ய ச **து**ஷ்க்ருதாம் |
**த**ர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்**ப**வாமி யு**கே** யு**கே** || 8 ||

ஸா**தூ**னாம் – *நல்லவர்களை;* பரித்ராணாய – *காப்ப தற்கும்;* **து**ஷ்க்ருதாம் – *தீயவர்களை;* வினா**சா**ய – *அழிப்ப தற்கும்;* **த**ர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ச – *தர்மத்தை நிலைநாட்டவும்;* யு**கே** யு**கே** – *யுகந்தோறும்;* ஸம்**ப**வாமி – *தோன்றுகிறேன்.*

**8. நல்லவர்களைக் காப்பதற்கும், தீயவர்களை அழிப் பதற்கும், தர்மத்தை நிலைநாட்டவும் யுகந்தோறும் நான் தோன்றுகிறேன்.**

**அவதார புருஷரை அறிவதால் என்ன பயன்?**

**जन्म कर्म च मे दिव्यम् एवं यो वेत्ति तत्वत: ।**
**त्यक्त्वा देहं पुनर्जन्म नैति मामेति सोऽर्जुन ॥ ९ ॥**

ஜன்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத: |
த்யக்த்வா தேஹம் புனர்ஜன்ம நைதி மாமேதி ஸோऽர்ஜுன ||
9 ||

*அர்ஜுன – அர்ஜுனா; மே – எனது; திவ்யம் – மேலான; ஜன்ம – பிறப்பையும்; கர்ம – செயல்களையும்; ஏவம் – இவ்வாறு; ய: – யார்; தத்வத: – உள்ளது உள்ளபடி; வேத்தி – அறிந்துகொள்கிறானோ; ஸ: – அவன்; தேஹம் – உடம்பை; த்யக்த்வா – விட்ட பிறகு; புன: – மீண்டும்; ஜன்ம ந ஏதி – பிறப்பதில்லை; மாம் – என்னை; ஏதி – அடைகிறான்.*

**9. அர்ஜுனா! எனது மேலான பிறப்பையும் செயல் பாட்டையும் இவ்வாறு யார் உள்ளது உள்ளபடி அறிந்து கொள்கிறானோ, அவன் உடம்பை விட்டபிறகு மீண்டும் பிறப்பதில்லை, என்னை அடைகிறான்.**

*'அவதாரங்கள் ''கபால மோசனர்கள்'' அதாவது மனிதர் களுடைய விதியையே அவர்களால் மாற்ற முடியும்'*[1] *என் கிறார் சுவாமி விவேகானந்தர். அவரது கருத்துப்படி, விதியை மாற்றி அமைக்க 'அவதார புருஷரால் முடியும், சாதாரண குருவால் முடியாது.'*[2] *மனிதர்களின் விதியை மாற்றியமைத்து முக்தியை வழங்க வல்லவர் அவதார புருஷர். இத்தகைய வர்களை அறிய வேண்டும். அறிந்தால் பிறப்பு கிடையாது.*

*அதாவது, கிருஷ்ணர், ராமர் போன்ற அவதார புருஷர் களின் பிறப்பையும் அவர்கள் செய்தவற்றையும் அறிபவர் களுக்கு மீண்டும் பிறப்பில்லை, அவர்கள் இறைவனை அடைகிறார்கள் என்பது இந்தச் சுலோகத்தின் கருத்து. மகாபாரதம், பாகவதம், ராமாயணம் போன்ற நூல்களைப் படித்த அனைவருக்கும் இந்த விஷயங்கள் தெரியுமே! இவற்றைப் படிக்கின்ற அனைவரும் இறைவனை*

*1. ஞானதீபம், 6.398.*
*2. ஞானதீபம், 6.396.*

*அடைவார்களா? இல்லை. அதைக் குறிப்பிடத்தான் இங்கே 'உள்ளது உள்ளபடி' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக் கிறது. எனவே வெறும் நூலறிவால் பிறப்பின்மையை அடைய முடியாது. ஆன்மீக சாதனைகள் செய்து, அனுபூதி யில் அவதார புருஷர்களின் உண்மை நிலையை உணர வேண்டும். அவ்வாறு அவர்களின் அருள்பெற்று பிறப்பற்ற நிலையை அடையலாம். அந்தச் சாதனைகளைப்பற்றி அடுத்த சுலோகம் கூறுகிறது.*

---

***அவதார புருஷரை அறிவது எப்படி?***

**वीतरागभयक्रोधा मन्मया मामुपाश्रिता: ।**
**बहवो ज्ञानतपसा पूता मद्भावमागता: ॥ १० ॥**

வீதரா**க ப**யக்ரோ**தா** மன்மயா மாமுபா**ச்ரி**தா: |
**ப**ஹவோ ஜ்ஞானதபஸா பூதா மத்**பா**வமா**க**தா: || *10* ||

வீத ரா**க ப**ய க்ரோ**தா:** – *ஆசை, பயம், கோபம் நீங்கிய வர்கள்;* மன்மயா: – *என்னால் நிறைக்கப்பட்டவர்கள்;* மாம் – *என்னை;* உபா**ச்**ரிதா: – *சரணடைந்தவர்கள்;* ஜ்ஞானதபஸா – *ஞானத்தாலும் தவத்தாலும்;* பூதா: – *புனிதமானவர்கள்;* **ப**ஹவ: – *பலர்;* ம**த்பா**வம் – *என் இயல்பை;* ஆ**க**தா: – *அடைந்தார்கள்.*

**10. ஆசை, பயம், கோபம் நீங்கிய, என்னால் நிறைக்கப் பட்ட, என்னைச் சரணடைந்த, ஞானத்தாலும் தவத் தாலும் புனிதமான பலர் என் இயல்பை அடைந்தார்கள்.**

*அவதார புருஷர்களை 'உள்ளபடி' அறிவதற்கான வழி இங்கே கூறப்படுகிறது. அந்த வழி என்ன? இறை இயல்பை அடைய வேண்டும். தெய்வம் ஆகி தெய்வத்தை வழிபட வேண்டும்.*[1] *பூஜைகளின் அடிப்படைத் தத்துவம் இது. பூஜை செய்பவன் தன் உடம்பையும் மனத்தையும் தெய்வீகமாக ஆக்கிக்கொள்வது பூஜையின் முதற்படி ஆகும். அவ்வஇறை இயல்பை அடைவதற்கு இங்கே மூன்று கருத்துக் களைக் கூறுகிறார் ஸ்ரீகிருஷ்ணர்.*

1. தேவோ பூத்வா தேவம் யஜேத் |

*இறை இயல்பை அடைவதற்கு இங்கே மூன்று கருத்துக் களைக் கூறுகிறார் ஸ்ரீகிருஷ்ணர்.*

***1. எதிர்மறை குணங்களை விடுவது.*** *நம்மில் திருப்தி காணாமல் புறத்திலுள்ள ஒன்றை நாடுவதே ஆசை. நமது இயல்பை நாம் புரிந்துகொள்ளாத நிலையில் மட்டுமே ஆசை எழுகிறது. அதனை விடுவது, நமது இயல்பில் நாம் நிலைநிற்க ஓர் அடிப்படை நியதி ஆகிறது. அதுபோலவே பயம். பயம் எப்போது வருகிறது? நமக்கு அழிவு வருகிறது என்று தோன்றும்போது. ஆனால் நாம் அழிவற்றவர்கள் என்ற கருத்து நம்மிடம் நிலைபெற்றிருக்குமானால் நாம் பயப்படத் தேவையில்லை. எனவே பயத்தை நீக்குவதும் ஓர் அடிப்படை நியதி ஆகிறது. மூன்றாவதாக கோபம். கோபம் 'தற்காலிக பைத்தியம்'* (temporary insanity) *என்று கூறப்படு கிறது. அதைத் தவிர்ப்பதும் இன்றியமையாததாகிறது.*

***2. இறைவனால் நிறைக்கப்படுவது.*** *இறைவனை அடைய நினைப்பவன் தன்னையும் தனது எண்ணங்களையும் செயல்பாடுகளையும் இறைவனால் அதாவது இறை எண்ணங்களால் நிறைக்க வேண்டும். காலையிலும் மாலை யிலும் குறிப்பிட்ட வேளையில் இறைவனை நினைப்பது, அவரைத் தியானிப்பது எல்லாம் ஆன்மீக முன்னேற்றத் திற்குத் துணை செய்பவைதான். ஆனால் இறைவனை அடைய நினைப்பவனுக்கு அவை மட்டும் போதாது. அவன் தனது வாழ்க்கை முழுவதையும் இறை வாழ்க்கையாக மாற்றி யிருக்க வேண்டும். குடும்பம், அலுவலகம், சமுதாயம் என்று அனைத்துடனுமான தனது வாழ்க்கையை இறை வாழ்க்கையாக மாற்ற அவன் அறிந்திருக்க வேண்டும்.*

***3. இறைவனைச் சரணடைந்த வாழ்க்கை.*** *ஒரு பிரச்சினை என்று வந்தால் பொதுவாக அதற்கான தீர்வை வெளியுலகில் தேடுவது மனித இயல்பு. சில சூழ்நிலைகளை மாற்றி யமைப்பதன்மூலம், சில மனிதர்களை நாடுவதன்மூலம் பிரச்சினைகளுக்கு நாம் தீர்வு காண்கிறோம். ஆனால் இறைவனை அடைய நினைப்பவன், தனது பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வைத் தன்னுள்ளேயே காண வேண்டும்.*

*அதாவது தன்னுள் உறைகின்ற இறைவனிடமே அவன் பிரச்சினைகளை எடுத்துச் செல்ல வேண்டும். எதற்காகவும் அவன் புற உலகில் விடை தேட முயற்சிக்கக் கூடாது.*

***4. புனிதர்கள் ஆவது.*** இதற்கு இரண்டு பயிற்சிகள் சொல்லப்பட்டுள்ளன—i. ஞானம், ii. தவம்.

i. *ஞானம் என்றால் ஆன்மீக ஞானம்; தான் உடம்பையும் மனத்தையும் கடந்த ஆன்மா என்ற திடமான உணர்வு. இதனை மீண்டும்மீண்டும் சிந்தித்து உறுதிப்படுத்துந் தோறும் உடல் மற்றும் மன சம்பந்தமான அழுக்குகளிலிருந்து விடுபட்டு புனிதம் பெறுகிறோம்.*[1]

ii.*மனத்தைத் தூய்மைப்படுத்துகின்ற பயிற்சிகளுள் தவம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். தபஸ் என்பது இதன் மூலச் சொல். தபஸ் என்பதன் பொருள் தகித்தல். எது நம்மைத் தகிக்கச் செய்கிறதோ அதாவது புலன்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறதோ அது தவம் ஆகிறது. தவத்திலிருந்து ஆற்றல் பிறக்கிறது. அந்த ஆற்றல் மனத்தைத் தூய்மைப்படுத்துவதுடன், அதனை இறைநெறியிலும் அழைத்துச் செல்கிறது.*

*இவ்வாறு இந்த நான்கு முக்கியமான பயிற்சிகளால் மனிதன் தெய்வ இயல்பை அடைகிறான். தெய்வ இயல்பை அடைந்தவன் மட்டுமே தெய்வத்தைத் தேட வல்லவன்.*

***பாதைகள் பல: 11–12***

**ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् ।**
**मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥ ११ ॥**

யே யதா மாம் ப்ரப**த்**யந்தே தாம்ஸ்ததைவ **ப**ஜாம்யஹம் |
மம வர்த்மானுவர்த்தந்தே மனுஷ்யா: பார்த்த ஸர்வ**ச**: || *11* ||

யே – *யார்;* மாம் – *என்னை;* யதா – *எப்படி;* ப்ரப**த்**யந்தே – *வழிபடுகிறார்களோ;* தான் – *அவர்களை;*

*1. கீதை, 4.38, 39 விளக்கவுரையும் காண்க.*

*ததா ஏவ – அப்படியே; அஹம் – நான்;* **ப**ஜாமி *– வழிநடத்துகிறேன்; பார்த்த – அர்ஜுனா; மனுஷ்யா: – மனிதர்கள்; மம – என்னுடைய; வர்த்ம – வழியை; ஸர்வச: – எப்போதும்; அனுவர்த்தந்தே – பின்பற்றுகின்றனர்.*

**11. யார் என்னை எப்படி வழிபடுகிறார்களோ, அவர்களை அப்படியே நான் வழிநடத்துகிறேன். அர்ஜுனா! மனிதர்கள் என்னுடைய வழியையே எப்போதும் பின்பற்றுகின்றனர்.**

*எல்லா பாதைகளும் 'என்னுடைய வழிகளே' என்று ஸ்ரீபகவான் கூறுகிறார். 'இப்போது எந்த மதங்களையெல் லாம் பார்க்கிறாயோ அவை இறைவனுடைய விருப்பத் தினால் தோன்றியவை'[1] என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர். எனவே எந்தப் பாதையானாலும் அது இறைவனிடமே அழைத்துச் செல்கிறது. வேண்டியவை அகப் பயிற்சிகள், பயிற்சிகளின்மூலம் புனிதம் பெறல். புனிதம் பெற்றபிறகு, அவன் எந்தப் பாதையில் செல்கிறான் என்பது முக்கியம் அல்ல. பின்பற்றுவதை உண்மையான ஈடுபாட்டுடன் பின் பற்ற வேண்டும். அதுதான் தேவையானது.*[2]

**काङ्क्षन्तः कर्मणां सिद्धिं यजन्त इह देवताः ।**
**क्षिप्रं हि मानुषे लोके सिद्धिर्भवति कर्मजा ॥ १२ ॥**

காங்க்ஷந்த: கர்மணாம் ஸி**த்தி**ம் யஜந்த இஹ **தே**வதா: |
க்ஷிப்ரம் ஹி மானுஷே லோகே ஸி**த்தி**ர் **ப**வதி கர்மஜா || 12 ||

கர்மணாம் *– செயல்களின்;* ஸி**த்தி**ம் *– பலனை;* காங்க்ஷந்த: *– விரும்புபவர்கள்;* இஹ *– இங்கே;* **தே**வதா: *– தேவதைகளை;* யஜந்தே *– வழிபடுகிறார்கள்;* ஹி *– ஏனெனில்;* மானுஷே லோகே *– பூமியில்;* கர்மஜா ஸி**த்தி:** *– செயல் களின் பலன்;* க்ஷிப்ரம் *– விரைவில்;* **ப**வதி *– உண்டாகிறது.*

---

*1. அமுத மொழிகள், 2.574.*

*2. கீதை, 7.21-ம் காண்க*

**12. செயல்களின் பலனை விரும்புபவர்கள் இங்கே தேவதைகளை வழிபடுகிறார்கள். ஏனெனில் பூமியில் செயல்களின் பலன் விரைவில் உண்டாகிறது.**

*இறைவனை லட்சியமாகக் கொள்வதும் உலக இன்பங் களை ஒதுக்கிவிட்டு இறை நெறியில் செல்வதும் எல்லோ ராலும் இயலாது. உலகம் மற்றும் அதன் இன்பங்கள் வேண்டும் என்று நினைப்பவர்களுக்காக தேவதைகளை இறைவன் படைத்துள்ளார். வேத காலத்தில் இந்திரன், வருணன் போன்ற தேவர்கள் வழிபடப்பட்டனர்; இந்தக் காலத்தில் மாடன், முனியாண்டி, இசக்கி போன்ற தேவதைகள் வழிபடப்படுகின்றனர்.*[1]

## செயலில் செயலின்மை (ஞானகர்ம சன்னியாசம்) : 13–42

### ஸ்ரீபகவானின் வாழ்க்கை ஓர் உதாரணம்: *13–15*

**चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ।**
**तस्य कर्तारमपि मां विद्ध्यकर्तारमव्ययम् ॥ १३ ॥**

சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்ட்டம் குணகர்ம வி**பாகச**: |
தஸ்ய கர்த்தாரமபி மாம் வி**த்த்**யகர்த்தாரமவ்யயம் || 13 ||

குண கர்ம வி**பாகச:** – *குணம் மற்றும் செயலின் வேறுபாட்டிற்கு ஏற்ப;* சாதுர்வர்ண்யம் – *நான்கு பிரிவுகள்;* மயா – *என்னால்;* ஸ்ருஷ்ட்டம் – *ஏற்படுத்தப்பட்டன;* தஸ்ய – *அதற்கு;* கர்த்தாரம் அபி – *கர்த்தா எனினும்;* மாம் – *என்னை;* அகர்த்தாரம் – *அகர்த்தா;* அவ்யயம் – *மாற்றம் அற்றவன்;* வி**த்தி** – *அறி.*

**13. மனிதர்களின் குணம் மற்றும் செயல்களின் வேறு பாட்டிற்கு ஏற்ப அவர்களை நான்கு பிரிவாக நான் வகுத் தேன். இவ்வாறு செய்தவன் நான் எனினும், என்னை அப்படிச் செய்யாதவனாகவும், மாற்றங்கள் இல்லாத வனாகவும் அறிந்துகொள்.**

---

*1. கீதை, 7.20–23 -ம் காண்க*

*குணத்திலும் செயல்பாடுகளிலும் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டவனாக இருக்கிறான். தனக்கு ஏற்புடைய செயல்களைச் செய்யும்போது ஒருவனால் தனது முழுத் திறமையையும் வெளிப்படுத்த முடிகிறது. அதற்காக அமைக்கப்பட்டதே இந்த நான்கு பிரிவுகள்.*[1] *நமது நாடு மேன்மையின் சிகரங்களை அன்று எட்டி இருந்ததற்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறலாம்.*

*மகாபாரதப் போரில் நடுநாயகமானவராக இருந்தும், தாம் எதையும் செய்யாதவர் என்று குறிப்பிடுகிறார் ஸ்ரீபகவான். தாம் எப்படிச் செயல் புரிந்ததால் அந்த நிலை சாத்தியமாயிற்று என்பதைக் கூறுவதன்மூலம் நாம் எப்படிச் செயலில் ஈடுபட வேண்டும் என்பதை உணர்த்துகிறார். தொடரும் சுலோகங்கள் அதனைக் கூறுகின்றன.*

**न मां कर्माणि लिम्पन्ति न मे कर्मफले स्पृहा ।**
**इति मां योऽभिजानाति कर्मभिर्न स बध्यते ॥ १४॥**

ந மாம் கர்மாணி லிம்பந்தி ந மே கர்ம:பலே ஸ்ப்ருஹா |
இதி மாம் யோऽ**பி**ஜாநாதி கர்ம**பி**ர் ந ஸ **பத்**யதே || 14 ||

கர்மாணி – *செயல்கள்;* மாம் – *என்னை;* ந லிம்பந்தி – *ஆதிக்கம் செலுத்துவதில்லை;* மே – *எனக்கு;* கர்ம:பலே – *வினைப்பயனில்;* ந ஸ்ப்ருஹா – *ஆசையில்லை;* இதி – *இப்படி;* மாம் – *என்னை;* ய: – *யார்;* அ**பி**ஜாநாதி – *அறிகிறானோ;* ஸ: – *அவன்;* கர்ம**பி:** – *செயல்களினால்;* ந **பத்**யதே – *கட்டப்படுவதில்லை.*

**14. செயல்கள் என்மீது ஆதிக்கம் செலுத்துவதில்லை. வினைப்பயனிலும் எனக்கு ஆசையில்லை. இப்படி என்னை யார் அறிகிறானோ, அவன் செயல்களினால் கட்டப்படுவதில்லை.**

---

*1. கீதை, 18.41–44–ம் காண்க.*

*ஸ்ரீபகவானின் வாழ்க்கையைப் படிப்பவர்கள் ஒரு விஷயத்தைக் காண முடியும்— எந்த நிகழ்ச்சிகளும் அவரைக் கட்டுப்படுத்தவில்லை. நிகழ்ச்சிகள் அனைத்தையும் கடந்து நின்றார் அவர். அவரது இந்தப் பண்பில், நாம் எப்படி வேலை செய்ய வேண்டும் என்பது சுட்டிக் காட்டப்படுவதைக் காண்கிறோம். 'நிறைநிலை அடைந்த முனிவர்கள் தங்கள் வாழ்வில் வாழ்ந்து காட்டிய உண்மையை நாம் பயிற்சியாகச் செய்ய வேண்டும். அப்போது அந்த உண்மையை நாமும் அடைய முடியும்.'*[1]

**एवं ज्ञात्वा कृतं कर्म पूर्वैरपि मुमुक्षुभिः ।**
**कुरु कर्मैव तस्मात्त्वं पूर्वैः पूर्वतरं कृतम् ॥ १५ ॥**

ஏவம் ஜ்ஞாத்வா க்ருதம் கர்ம பூர்வைரபி முமுக்ஷு**பி**: |
குரு கர்மைவ தஸ்மாத் த்வம் பூர்வை: பூர்வதரம் க்ருதம் ||15||

ஏவம் – *இவ்வாறு;* ஜ்ஞாத்வா – *அறிந்து;* பூர்வை: முமுக்ஷு**பி:** அபி – *முன்னைய முமுட்சுக்களாலும்;* கர்ம க்ருதம் – *செயல் செய்யப்பட்டது;* தஸ்மாத் – *எனவே;* த்வம் – *நீ;* பூர்வை: – *முன்னோர்களால்;* பூர்வதரம் – *முன்னாளில்;* க்ருதம் – *செய்யப்பட்ட;* கர்ம ஏவ – *செயலையே;* குரு – *செய்.*

**15. இவ்வாறு அறிந்துதான் முன்னைய முமுட்சுக்களும் செயல் புரிந்தனர். முன்னோர்கள் முன்னாளில் செய்தது போலவே நீயும் செய்.**

*மோட்சத்தை நாடுபவன் முமுட்சு. முன்னாளில் மோட்சத்தை நாடியவர்கள் எதைச் செய்தார்களோ அதைப் பின்பற்றும்படி இங்கே அர்ஜுனனுக்கு பகவான் கூறுகிறார். நாட்டை ஆள்வதற்கான வழியை அல்ல, மோட்சத்தை அடைவதற்கான வழியையே அவர் கூறிக் கொண்டிருக்கிறார் என்பது இங்கே மீண்டும் ஒருமுறை வலியுறுத்தப்படுகிறது.*

---

*1. ஸர்வத்ரைவ ஹி அ**த்**யாத்ம **சா**ஸ்த்ரே க்ருதார்த்த லக்ஷணானி யானி தான்யேவ ஸா**த**னானி உப**தி**ச்யந்தே, யத்ன ஸா**த்**யத்வாத் |*
*—கீதை, **2.55** முன்னுரையில் ஸ்ரீசங்கரர்.*

மேன்மக்கள் செய்வதை நாம் பின்பற்ற வேண்டும். ஆனால் அவர்கள் செய்கின்ற எல்லாவற்றையும் நாம் செய்துவிட முடியுமா? அல்லது செய்யத்தான் வேண்டுமா? செய்யவும் முடியாது, செய்யத் தேவையும் இல்லை. அப்படியானால் எவற்றை ஏற்றுக் கொள்வது, எவற்றை விடுவது?

மேலோரைப் பின்பற்ற வேண்டும் என்பது உண்மை. அதற்காக, அவர்களின் வாழ்க்கையையோ, வாழ்க்கை நிகழ்ச்சிகளையோ பின்பற்ற முயற்சித்தால் விளைவு விபரீத மாகவே முடியும். அவர்களது லட்சியங்கள், அந்த லட்சியங் களை அடைய அவர்களுக்கிருந்த தகுதி, ஆர்வத்துடிப்பு, விடாமுயற்சி இவையே நாம் பின்பற்ற வேண்டியவை. அன்னை ஸ்ரீசாரதா தேவி, சுவாமி விவேகானந்தர் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணருடைய பிற சீடர்களின் வரலாறு இதற்கு உன்னதமான உதாரணம் ஆகும். இவர்கள் அத்தனைபேரும் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பின்பற்றியவர்கள், தங்கள் ஆன்மீக வாழ்க்கைக்கான அனைத்தையும் அவரிடமிருந்தே பெற்ற வர்கள். ஆனால் இவர்களுள் யாருடைய வாழ்க்கையும் அவரது வாழ்க்கையைப்போல் இருக்கவில்லை. பெற வேண்டிய ஆன்மீக விதையை அவரிடமிருந்து பெற்றுக் கொண்டு தங்கள் தகுதிகளுக்கேற்ப வளர்ந்தார்கள். மேலோரைப் பின்பற்றுவது என்பதை இந்தக் கருத்தின் பின்னணியில் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**<u>எதைச் செய்வது? எதை விடுவது?: *16–17*</u>**

**किं कर्म किमकर्मेति कवयोऽप्यत्र मोहिताः ।**
**तत्ते कर्म प्रवक्ष्यामि यज्ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात् ॥ १६ ॥**

கிம் கர்ம கிமகர்மேதி கவயோऽப்யத்ர மோஹிதா: |
தத் தே கர்ம ப்ரவக்ஷ்யாமி யத் ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽ**சுபாத்** ||

கிம் கர்ம – *செய்ய வேண்டியது எது;* கிம் அகர்ம – *செய்யக் கூடாதது எது;* இதி அத்ர – *என்ற விஷயத்தில்;*

*கவய: அபி – அறிவாளிகள்கூட; மோஹிதா: – குழம்பி விடுகிறார்கள்; யத் – எதை; ஜ்ஞாத்வா – அறிந்தால்; அ**சுபா**த் – தீமையிலிருந்து; மோக்ஷ்யஸே – விடுபடுவாயோ; தத் கர்ம – அந்தச் செயலை; தே – உனக்கு; ப்ரவக்ஷ்யாமி – கூறுகிறேன்.*

**16. செய்ய வேண்டியது எது, செய்யக் கூடாதது எது என்ற விஷயத்தில் அறிவாளிகள்கூட குழம்பிவிடு கிறார்கள். எதை அறிந்தால் தீமையிலிருந்து விடுபடுவாயோ அந்தச் செயலை உனக்குச் சொல்கிறேன்.**

**कर्मणो ह्यपि बोद्धव्यं बोद्धव्यं च विकर्मण: ।**
**अकर्मणश्च बोद्धव्यं गहना कर्मणो गति: ॥ १७ ॥**

கர்மணோ ஹ்யபி **போத்த**வ்யம் **போத்த**வ்யம் ச விகர்மண: |
அகர்மண**ச்**ச **போத்த**வ்யம் **க**ஹனா கர்மணோ **க**தி: || *17* ||

*கர்மண: அபி – செய்ய வேண்டியதையும்; **போத்த**வ்யம் – தெரிய வேண்டும்; விகர்மண: ச – செய்யக் கூடாததையும்; **போத்த**வ்யம் – தெரிய வேண்டும்; அகர்மண: ச – செயல்புரியாமல் இருப்பதுபற்றியும்; **போத்த**வ்யம் – தெரிய வேண்டும்; கர்மண: – செயல்களின்; **க**தி: – போக்கு; **க**ஹனா ஹி – ஆழமானது.*

**17. செய்ய வேண்டியதையும் தெரிந்துகொள்ள வேண்டும், செய்யக் கூடாததையும் தெரிந்துகொள்ள வேண்டும், செயல்புரியாமல் இருப்பதுபற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். செயல்களின் போக்கு ஆழமானது.**

*வாழ்க்கை நம்முன் கொண்டுவருகின்ற நிகழ்ச்சிகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப செயல்படுவது மிகவும் சிரமமான காரியம். சூழ்நிலைகள் ஒன்றாக இருக்கலாம், செயலும் ஒன்றாக இருக்கலாம், ஆனால் ஒரு குறிப்பிட்ட நபர் ஒன்றைச் செய்யலாமா கூடாதா என்பதை அவ்வளவு எளிதாக நிர்ணயித்துவிட முடியாது. மாடியிலிருந்து ஒருவன் குதிப்பதை தூரத்திலிருந்து நாம் காண்கிறோம். அது சரியா*

*தவறா என்பதை உடனடியாக நாம் முடிவு செய்துவிட இயலாது. ஏனெனில் அவன் எதற்காகக் குதிக்கிறான் என்பது நமக்குத் தெரியாது. அவன் ஆபத்தில் இருக்கின்ற யாரையோ காப்பாற்றுவதற்காகக் குதித்திருக்கலாம், நண்பனிடம் பந்தயம் கட்டிவிட்டு, அதில் வெல்வதற்காகக் குதித்திருக்க லாம், தன் வீரத்தைக் காட்டுவதற்காகக் குதித்திருக்கலாம், தற்கொலை செய்வதற்காகக் குதித்திருக்கலாம்; அல்லது அவன் ஒரு பைத்தியக்காரனாக இருந்து, அதன் காரணமாகக் குதித்திருக்கலாம். எனவே அவன் குதித்தது சரியா தவறா, அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமா வேண்டாமா, பின் பற்ற வேண்டுமா வேண்டாமா என்பதை முடிவுசெய்ய அதற்கான காரணம் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்.*

*பரந்த அனுபவமும் அக விழிப்புணர்ச்சியும் இருந்தால் மட்டுமே எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பதை அறிய முடியும்.*

*அதுபோலவே, செயல்புரியாமல் இருக்கின்ற நிலை என்றால் உண்மையில் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். இதனை அடுத்த சுலோகம் விளக்குகிறது.*

**செயலில் செயலின்மை காண்பவன்**
**எல்லா செயல்களையும் செய்தவன்**

**कर्मण्यकर्म यः पश्येत् अकर्मणि च कर्म यः ।**
**स बुद्धिमान्मनुष्येषु स युक्तः कृत्स्नकर्मकृत् ॥ १८ ॥**

கர்மண்யகர்ம ய: பச்யேத் அகர்மணி ச கர்ம ய: |
ஸ **புத்தி**மான் மனுஷ்யேஷு ஸ யுக்த: க்ருதஸ்னகர்மக்ருத் ||

கர்மணி – *செயலில்;* அகர்ம – *செயலின்மையை யும்;* அகர்மணி ச – *செயலின்மையில்;* கர்ம – *செயலையும்;* ய: – *யார்;* பச்யேத் – *காண்கிறானோ;* ஸ: – *அவன்;* மனுஷ்யேஷு – *மனிதர்களுள்;* **புத்தி**மான் – *அறிவாளி;* ஸ: – *அவன்;* யுக்த: – *யோகி;* க்ருத்ஸ்னகர்மக்ருத் – *எல்லா செயல்களையும் செய்தவன்.*

**18. செயலில் செயலின்மையையும், செயலின்மையில் செயலையும் யார் காண்கிறானோ அவன் மனிதர்களுள் அறிவாளி, யோகி, எல்லா செயல்களையும் செய்தவன்.**

***செயலில் செயலின்மை:*** *ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு கதை சொல்வார்: 'ஒருசமயம் வியாசர் யமுனையைக் கடப்பதற்காக வந்து கொண்டிருந்தார். அப்பொழுது கோபியரும் யமுனைக் கரையில் நின்றுகொண்டிருந்தனர். அவர்களுக்கு தயிர், பால் வெண்ணெய் எல்லாம் விற்க வேண்டும். ஆனால் படகு இல்லை. எப்படி அக்கரைக்குப் போவது என்று ஆழ்ந்த கவலையில் மூழ்கி இருந்தனர். அப்போது வியாசர் அவர்களிடம், ''எனக்கு மிகவும் பசிக்கிறது'' என்றார். உடனே கோபியர் தங்களிடமிருந்த பாலேடு, வெண்ணெய் முதலியவற்றைக் கொடுத்தனர். வியாசர் ஏறக் குறைய எல்லாவற்றையும் உண்டார். பிறகு யமுனை அருகே சென்று, ''ஓ யமுனா தேவீ, நான் எதையும் சாப்பிடாதது உண்மையென்றால் உனது நீர் இரண்டாகப் பிரியட்டும். அந்த வழியாக நாங்கள் போவோம்'' என்றார். அப்படியே நடந்தது. அந்த வழியாக வியாசரும் கோபியரும் யமுனையைக் கடந்து மறுகரையை அடைந்தனர்.'*[1]

*செயலில் செயலின்மை என்ற கருத்திற்கு இந்தக் கதை ஓர் எடுத்துக்காட்டு. வியாசர் நன்றாகச் சாப்பிட்டார், அதேவேளையில் அவர் சாப்பிடவில்லை என்பது யமுனை பிரிந்து வழிவிட்டதன்மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டது. இந்தக் கதையின் உட்கருத்தை இரண்டு விதமாக விளக்குகிறார் ஸ்ரீராமகிருஷ்ணர்:*

i. *'நான் சாப்பிடவில்லை என்பது ''நான் சுத்த ஆன்மா'' என்பதைக் குறிக்கிறது. சுத்த ஆன்மா பற்றற்றது, இயற்கைக்கு அப்பாற்பட்டது. அதற்குப் பசி தாகம் இல்லை; பிறப்பு இறப்பு இல்லை. அது மேருமலைபோல் மூப்பற்றது, என்றென்றும் இருப்பது. யாருக்கு இந்த பிரம்ம ஞானம்*

---

*1. அமுத மொழிகள், 3.51.*

ஏற்படுகிறதோ அவன் ஜீவன்முக்தன். ஆன்மா வேறு, உடல் வேறு என்பதைத் தெளிவாக அவன் அறிகிறான்.'[1]

ii. 'இதுதான் ஆழ்ந்த நம்பிக்கை; ''உண்டவன் நான் அல்ல, இதய நடுவில் உறைகின்ற நாராயணனே உணவு உட்கொண்டவர்'' என்ற ஆழ்ந்த நம்பிக்கை.'[2]

'ஆனால் இந்த ஞானம் வருவது மிகவும் கடினம். வெறுமனே பேசுவதால் பிரம்ம ஞானம் வந்து விடாது.'[3] என்று கூறி எச்சரிக்கவும் செய்கிறார் அவர். தான் ஆன்மா என்ற அனுபூதி பெற்றவன் அல்லது தன் இதயத்தில் இறைவன் இருப்பதைக் கண்டவனால் மட்டுமே செயலில் செயலின்மை காண முடியும்.

***செயலின்மையில் செயல்:*** செயலின்மை என்பதை 'ஓய்வு' என்று சுவாமி விவேகானந்தர் பொருள்கொள்கிறார். இந்தச் சுலோகத்திற்கு அவர் 'செயல்களின் ஊடே ஓய்வு பெறவும், ஓய்வின் ஊடே செயல் புரியவும் யாரால் முடியுமோ, அவனே மனிதருள் ஞானி, அவனே யோகி, அவனே எல்லா செயல்களையும் செய்ய வல்லவன்'[4] என்று பொருள் எழுதுகிறார். 'இதுவே முழுமையான லட்சியம். இதை அடைவது மிகச் சிலரே'[4] என்று சுட்டிக்காட்டி, அத்தகைய ஒருவராக தாம் சந்தித்த பவஹாரி பாபா[5] என்பவரைக் கூறுகிறார். வாழ்நாள் முழுவதையும் ஒரு குகையினுள் கழித்தவர் அவர். 'உலகத்திற்கு உதவி செய்வதற்காக ஏன் நீங்கள் குகையை விட்டு வெளியே வரவில்லை?' என்று சுவாமிஜி அவரிடம் கேட்டார். அதற்கு அவர், 'உடம்பால் செய்கின்ற உதவி ஒன்றுதான் உதவி என்று நினைக்கிறாயா? உடம்பின் செயல்பாடு எதுவும் இல்லாமல் ஒரு மனம் வேறு மனங்களுக்கு உதவ முடியாதா

---

1. அமுத மொழிகள், 3.51.
2. அமுத மொழிகள், 1.359.
3. அமுத மொழிகள், 3.52.
4. ஞான தீபம், 7.198.
5. ஞான தீபம், 7, 193-208-இல் பவஹாரி பாபாவின் வரலாறு உள்ளது.

*என்ன?'*[1] *என்று பதில் கூறினார். 'மாமனிதர்கள் ஆரவாரம் இன்றி, அமைதியாக, பிறர் அறியாதவர்களாக வாழ்கிறார்கள். அவர்கள்தான் உண்மையிலேயே சிந்தனையின் ஆற்றலை அறிந்தவர்கள். தாங்கள் ஒரு குகைக்குள் நுழைந்து கதவை அடைத்துக்கொண்டு, ஐந்தே ஐந்து கருத்துக்களைச் சிந்தித்து விட்டு, அங்கேயே இறந்துவிட்டாலும்கூட, தங்களுடைய அந்த ஐந்து சிந்தனைகளும் காலங்காலமாக வாழும் என்பது அவர்களுக்கு சர்வநிச்சயமாக இருந்தது. உண்மைதான். அத்தகைய சிந்தனைகள் மலைகளை ஊடுருவி, கடல்களைக் கடந்து, உலகில் நுழைந்து பரவும் வல்லமை பெற்றவை. அவை மனித இதயங்களில், மூளைகளில் ஆழமாகப் புகுந்து, அன்றாட வாழ்க்கையில் அவற்றிற்குச் செயல்முறை விளக்கம் தரவல்ல ஆண்களையும் பெண்களையும் கிளர்ந்தெழச் செய்யும்.'*[2] *செயலின்மையில் செயல் என்பதை அவர் இவ்வாறு விளக்குகிறார்.*

## செயலில் செயலின்மையையும் செயலின்மையில் செயலையும் காண்பதற்கான நிபந்தனைகள்: *19–23*

*இரண்டு வழிகளில் கர்மயோகம் செய்யலாம்; அதில் இறை நம்பிக்கை உள்ளவர்களுக்கான வழியை 3.30–இல் கண்டோம். இங்கே இந்த 5 சுலோகங்களில் மற்ற வழி கூறப் படுகிறது. இது 'புறத்திலிருந்து வருகின்ற எந்த உதவியையும் நம்பாதவர்களுக்கு உரியது. தங்களுக்குரிய வழிமுறைகளைத் தேடிக்கொள்ளும் பொறுப்பு அவர்களுடையதே. தங்கள் சொந்த சங்கல்பங்கள், மன ஆற்றல்கள், விவேகம் இவற்றைத் துணையாகக் கொண்டு ''நான் பற்றில்லாமல் இருப்பேன்'' என்னும் உறுதியுடன் இவர்கள் செயலில் ஈடுபட வேண்டும்'*[3] *என்று இதனை விளக்குகிறார் சுவாமி விவேகானந்தர். இந்தப் பாதையைப் பின்பற்றுபவர்கள் இறைவனைக்கூட சார்ந் திருப்பதில்லை. எனவே மற்ற வழியைவிட இது கடின மானது என்கிறார் அவர். தொடரும் சுலோகங்களில் வரும்*

*1. ஞான தீபம், 7. 205.*
*2. ஞான தீபம், 1.208.*
*3. ஞான தீபம், 1.203.*

*நிபந்தனைகளைக் காணும்போது அதனை நாம் புரிந்து கொள்ள முடியும்.*

**यस्य सर्वे समारम्भाः कामसंकल्पवर्जिताः ।**
**ज्ञानाग्नि दग्धकर्माणं तमाहुः पण्डितं बुधाः ॥ १९ ॥**

யஸ்ய ஸர்வே ஸமாரம்***பா***: காமஸங்கல்ப வர்ஜிதா: |
ஜ்ஞானா**க்**னி ***தக்த***கர்மாணம் தமாஹு: பண்***டி***தம் ***பு***தா: || 19 ||

யஸ்ய – *யாருடைய;* ஸர்வே – *எல்லா;* ஸமாரம்**பா**: – *செயல்களும்;* காமஸங்கல்ப வர்ஜிதா: – *ஆசையும் சங்கல்ப மும் அற்றதாக இருக்குமோ;* ஜ்ஞானா**க்**னி **தக்த** கர்மாணம் – *ஞானத் தீயால் எரிக்கப்பட்ட கர்மத்தை உடைய;* தம் – *அவனை;* பண்**டி**தம் – *விவேகி என்று;* **புதா:** – *அறிஞர்கள்;* ஆஹு: – *சொல்கிறார்கள்.*

**19. யாருடைய செயல்கள் ஆசையும் சங்கல்பமும் அற்ற தாகவும், ஞானத் தீயால் எரிக்கப்பட்டதாகவும் இருக்குமோ அவனை விவேகி என்று அறிஞர்கள் சொல்கிறார்கள்.**

***1. ஆசையின்மை:*** *ஒரு கர்மயோகி ஆசைவசப்படக் கூடாது. அதாவது தனக்கென்று எந்த லாபத்தையும் எதிர் பார்த்து வேலை செய்யக் கூடாது.*

***2. சங்கல்பமின்மை:*** *'இயற்கையுடனும் அதன் குணங் களுடனும் தன்னை ஒன்றுபடுத்திக் கொள்கின்ற நிலையே சங்கல்பம்.'*[1] *அதாவது, ஒருவன் தன்னை உடம்புடனும் மனத்துடனும் அதன் ஆசாபாசங்களுடனும் ஒன்றுபடுத்திக் கொண்டு வேலை செய்வது கர்மம். அத்தகைய நிலை கூடாது. தான் ஆன்மா என்ற நிலையில் ஆன்மாவுடன் ஒன்று பட்டிருந்தபடி வேலை செய்வதே சங்கல்பமின்றி வேலை செய்வது ஆகும்.*

---

*1. ப்ரக்ருத்யா தத்**கு**ணை: ச ஆத்மானம் ஏகீக்ருத்ய அனுஸந்**தா**னம் ஸங்கல்பக: |*
*—ஸ்ரீராமானுஜர்*

***3. செயல்கள் ஞானத் தீயால் எரிக்கப்பட்டிருக்க வேண்டும்:*** *அதாவது ஆழ்ந்த அறிவின் துணையுடனேயே கர்மயோகம் செய்யப்பட வேண்டும். அது என்ன அறிவு? இதனைச் சற்று விரிவாகக் காண்பது அவசியம்.*

ஒரு கர்மயோகிக்கு முக்கியமாக மூன்று விதமான அறிவு வேண்டும்:

***1. சுய அறிவு:*** சுய அறிவு என்பது தன்னைப்பற்றிய அறிவு. இங்கே பெரிய ஆன்மீக நிலைகளைப்பற்றி நாம் குறிப்பிடவில்லை. நம்மைப்பற்றிய சாதாரண உண்மைகள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும், அவ்வளவுதான். நாம் யார், நாம் எதற்காக கர்மயோகம் செய்கிறோம் போன்ற கேள்விகளுக்கு விடை தெரிந்திருக்க வேண்டும்.

இதற்குத் தினமும் சுய ஆராய்ச்சியை ஒரு பயிற்சி யாகச் செய்ய வேண்டும். 'மனித இயல்பில் பெரிய அபாயம் ஒன்று உள்ளது— அவன் ஒருபோதும் சுய ஆராய்ச்சி செய்வது கிடையாது'[1] என்று எச்சரிக்கிறார் சுவாமி விவேகானந்தர்.

***2. உலகைப்பற்றிய அறிவு:*** நாம் கர்மயோகம் செய் கின்ற களம் உலகமாகும். எனவே அதனைச் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். 'இந்த உலகம் நல்லதும் இல்லை, கெட்டதும் இல்லை... நெருப்பு தன்னளவில் நல்லதோ தீயதோ இல்லை. அது நமக்கு இதமான வெதுவெதுப்பு தரும்போது, ''ஆ, எவ்வளவு அருமையான நெருப்பு!'' என் கிறோம்; விரலைச் சுட்டுவிட்டால் அதையே குறை கூறு கிறோம். எனினும் நெருப்பு தன்னளவில் நல்லதோ கெட்டதோ இல்லை. அதை நாம் எப்படிப் பயன்படுத்து கிறோமோ அதற்கு ஏற்ற உணர்ச்சியை அது நம்முள் எழுப்புகிறது. உலகமும் அவ்வாறே. அது பூரணமானது. பூரணமானது என்றால், தன் குறிக்கோளைப் பூரணமாக நிறை வேற்றுவதற்கான அனைத்தையும் கொண்டது என்பதே'[2]

*1. ஞான தீபம், 1. 110.*

*2. ஞான தீபம், 1. 122,123.*

என்று குறிப்பிடுகிறார் சுவாமிஜி. அதாவது, நடப்பவற்றிற்கு நாம் பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்; உலகத்தின்மீது பழிபோடக் கூடாது.

**3. கர்மயோகத்தைப்பற்றிய அறிவு:** இதில் மூன்று விஷயங்களைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

i. ஒரு கர்மயோகி தனது செயல்களின்மூலம் தன்னை மாற்றியமைக்க, தன்னை முன்னேற்ற முயற்சிக்க வேண்டுமே தவிர உலகை மாற்றியமைக்க நினைக்கக் கூடாது. ஏனெனில், 'இந்த உலகமும் நாயின் சுருண்ட வால்போல்தான் இருக்கிறது. அதை நிமிர்த்துவதற்காக மனிதர்கள் காலம்காலமாக முயன்று வருகிறார்கள். ஆனால் விட்டவுடனே அது சுருண்டுகொள்கிறது.'[1]

ii. 'நாம் எதற்காக உலகிற்கு நன்மை செய்ய வேண்டும்?... நாம் சற்று ஆழ்ந்து சிந்தித்தோமானால், உலகிற்கு நம் உதவி சிறிதுகூடத் தேவையில்லை என்பதைக் காணலாம். நீங்களோ நானோ வந்து உதவி செய்வோம் என்பதற்காக இந்த உலகம் படைக்கப்படவில்லை... பிறருக்கு உதவுவது என்பது நமக்கே நாம் உதவிக் கொள்வதுதான் என்பதை இறுதியில் உணர்வோம்.'[2]

iii. 'பிறருக்கு உதவுவது என்பது ஒரு பேறு என்ற எண்ணம் நமக்கு எப்போதும் இருக்குமானால், நன்மை செய்வதற்கான ஆசை மிகவும் ஆற்றல் வாய்ந்த தூண்டுசக்தியாகிவிடும்... பெற்றுக் கொள்பவன் அல்ல, கொடுப்பவனே பேறு பெற்றவன். உங்கள் தானத் திறத்தையும் இரக்கத்தையும் இந்த உலகத்தில் செயல்படுத்தி, அதன் மூலம் நீங்கள் தூய்மையும் நிறைநிலையும் அடைவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றி உடையவர்களாக இருங்கள். எல்லா நற்செயல்களுமே நம்மைத் தூய்மையை நோக்கி, நிறைநிலையை நோக்கியே இட்டுச் செல்கின்றன.'[3]

---

1. ஞான தீபம், 1. 126.
2. ஞான தீபம், 1. 121.
3. ஞான தீபம், 1. 122,123.

*இந்த மூவகை அறிவுகளுடன் செய்யப்படுகின்ற செயலே 'ஞானத்தீயால் எரிக்கப்பட்ட செயல்' என்று கூறப்பட்டது.*[1]

**त्यक्त्वा कर्मफलासङ्गं नित्यतृप्तो निराश्रयः ।**
**कर्मण्यभिप्रवृत्तोऽपि नैव किंचित्करोति सः ॥ २० ॥**

த்யக்த்வா கர்ம:பலாஸங்**க**ம் நித்யத்ருப்தோ நிரா**ச்**ரய: |
கர்மண்ய**பி**ப்ரவ்ருத்தோऽபி நைவ கிஞ்சித் கரோதி ஸ: || 20 ||

கர்ம:பலஆஸங்**க**ம் – *செயலின் பலனில் பற்றை;* த்யக்த்வா – *விட்டு;* நித்யத்ருப்த: – *நிலைத்த திருப்தி உடையவனாய்;* நிரா**ச்**ரய: – *எதையும் சாராதவனாய்;* ஸ: – *அவன்;* கர்மணி – *செயலில்;* அ**பி**ப்ரவ்ருத்த: அபி – *ஈடுபட்டாலும்;* கிஞ்சித் ஏவ – *எதையும்;* ந கரோதி – *செய்யவில்லை.*

> ***20. செயலின் பலனில் பற்றை விட்டு, நிலைத்த திருப்தி உடையவனாய், எதையும் சாராதவனாய் இருக்கின்ற ஒருவன் செயலில் ஈடுபட்டாலும், அவன் எதையும் செய்தவன் ஆக மாட்டான்.***

*மூன்று நிபந்தனைகள்: பலனில் பற்றின்மை, நிலைத்த திருப்தி, எதையும் சாராமல் இருத்தல்.*

**निराशीर्यतचित्तात्मा त्यक्तसर्वपरिग्रहः ।**
**शारीरं केवलं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम् ॥ २१ ॥**

நிரா**சீ**ர் யதசித்தாத்மா த்யக்த ஸர்வபரி**க்**ரஹ: |
***சா***ரீரம் கேவலம் கர்ம குர்வன்னாப்னோதி கில்**பி**ஷம் || 21 ||

நிரா**சீ:** – *ஆசையற்றவன்;* யதசித்த ஆத்மா – *மனத்தையும் உடம்பையும் கட்டுப்படுத்தியவன்;* த்யக்த ஸர்வ பரி**க்**ரஹ: – *உடைமைகள் அனைத்தையும் விட்டவன்;*

---

*1. கர்மயோகம் பற்றிய விளக்கத்திற்கு எமது மடத்தின் வெளியீடான 'எது கர்மயோகம்?' (ஆசிரியர்: சுவாமி பஜனானந்தர்) பார்க்கவும்.*

***சா**ரீரம் கேவலம் கர்ம – உடம்பால் மட்டும் செயல்கள்; குர்வன் – செய்வதால்; கில்**பி**ஷம் – பாவத்தை; ந ஆப்னோதி – அடைவதில்லை.*

**21. ஆசையற்ற, மனத்தையும் உடம்பையும் கட்டுப் படுத்திய, உடைமைகள் அனைத்தையும் விட்ட ஒருவன் உடம்பால் மட்டும் செயல்கள் செய்வதால் பாவத்தை அடைவதில்லை.**

*மூன்று நிபந்தனைகள்: ஆசையின்மை, மனத்தையும் உடம்பையும் கட்டுப்படுத்தல், உடைமைகளை விடுதல்.*

***உடைமைகள் அனைத்தையும் விடுதல்:** அனைத்தை யும் துறந்துவிட்டு தெருவில் போய் நிற்க வேண்டும் என்பதா இதன் பொருள்? இல்லை. சுவாமி விவேகானந்தர் விளக்குகிறார் :*

*'துறந்துவிடு என்ற கொள்கை இருக்கிறதே, அதன் பொருள் நமக்குத் தெரிந்த இந்தப் புலனின்ப வாழ்க்கை யைத் துறந்துவிடுவது என்றால், நமக்கு என்ன மிஞ்சும்? இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது?'[1] 'துறவு லட்சியம் வேதாந்த போதனைகளில் உள்ளதுபோல் வேறெங்கும் இவ்வளவு உயர்ந்த நிலையை அடையவில்லை. ஆனால் வேதாந்தம் வறட்டு அழிவு போதனையைச் செய்யவில்லை. அது துறவு என்று கூறுவதன் உண்மைப் பொருள், உலகை தெய்வீகமாக்குதல். அதை எப்படி நாம் உணர்கிறோமோ, அது எப்படி நமக்குத் தோற்றமளிக்கிறதோ அதை விட்டுவிட வேண்டும்; அது உண்மையில் எதுவோ அதை அறிய வேண்டும் என்பதுதான் அதன் பொருள். உலகைத் தெய்வீக மாக்குங்கள். அது கடவுளே. ''பிரபஞ்சத்திலுள்ள அனைத் துமே இறைவனால் சூழப்பட வேண்டும்''[2] என்று மிகவும் பழைய ஓர் உபநிஷதத்தின் ஆரம்பத்தில் காண்கிறோம்.*

---

*1. ஞானதீபம், 3.285.*

*2. ஈ**சா**வாஸ்யமி**த**ம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத் |*

*—ஈசாவாஸ்ய உபநிஷதம், 1.*

*'அனைத்தையும் இறைவனால் மூட வேண்டும்; ஒரு வகை போலியான இன்ப நோக்காகவோ இல்லை, துன்பங் களைக் கண்டும் காணாததுபோல் இருக்கும் பாசாங்காகவோ அல்ல. உண்மையிலேயே எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பதன்மூலம் இதைச் செய்ய வேண்டும். இவ்வாறு உலகத்தைத் துறக்க வேண்டும். உலகத்தைத் துறந்த பிறகு எஞ்சுவது என்ன? கடவுள்தான். இதன் பொருள் என்ன? நீ உன் மனைவியோடு வாழலாம்; அவளைக் கைவிட வேண்டும் என்பதல்ல. ஆனால் அவளிடம் கடவுளைக் காண வேண்டும். குழந்தைகளைத் துறந்துவிடுங்கள். இதன் பொருள் என்ன? எல்லா நாடுகளிலும் சில மனித மிருகங்கள் செய்வதைப்போல் குழந்தைகளை வீட்டைவிட்டுத் துரத்தி விடுவதா? இல்லவே இல்லை. அது கொடுமை; அரக்கத் தனம். அது ஆன்மீக உணர்வு அல்ல. ஆனால் உங்கள் குழந்தைகளில் இறைவனைக் காணுங்கள். எல்லாவற்றிலும் இப்படியே. வாழ்விலும் சாவிலும் இன்பத்திலும் துன்பத் திலும் எல்லாவற்றிலுமே இறைவன் சமமாக நிறைந்திருக் கிறார். கண்களைத் திறவுங்கள், அவரைப் பாருங்கள்.*[1]

இத்தகைய நிலையை அடைந்த ஒருவன் செய்கின்ற வேலைகள் உடம்பால் மட்டுமே செய்யப்படுபவை. மனம் எதிலும் சம்பந்தப்படாமல் தனித்து நிற்கிறது. செய்கின்ற வேலையின் பலனில் அவனுக்குப் பற்றில்லை. பற்றின்றிச் செய்யப்படும் பணி செய்யப்படாததற்குச் சமமே. அதாவது இந்த வேலைகள் புண்ணிய பாவங்களைத் தந்து பிறவிக்குக் காரணமாக அமைவதில்லை.

**यदृच्छालाभसन्तुष्टो द्वन्द्वातीतो विमत्सरः ।**
**समः सिद्धावसिद्धौ च कृत्वापि न निबध्यते ॥ २२ ॥**

ய**த்**ருச்**சா** லா**ப** ஸந்துஷ்ட்டோ **த்**வந்**த்**வாதீதோ விமத்ஸர: |
ஸம: ஸி**த்தா**வஸி**த்தௌ** ச க்ருத்வாபி ந நி**பத்**யதே || 22 ||

1. ஞானதீபம், 3.285–287.

*யத்ருச்சா* லாப ஸந்துஷ்ட்ட: – *எதேச்சையாகக் கிடைத்ததில் மகிழ்பவன்;* த்வந்த்வ அதீத: – *இருமைகளைக் கடந்தவன்;* விமத்ஸர: – *பொறாமை இல்லாதவன்;* ஸித்தெள அஸித்தெள ச – *வெற்றியிலும் தோல்வியிலும்;* ஸம: – *சமமாக இருப்பவன்;* க்ருத்வா அபி – *செயலில் ஈடுபட்டாலும்;* ந நிபத்யதே – *கட்டப்படுவதில்லை.*

**22. எதேச்சையாகக் கிடைத்ததில் மகிழ்பவன், இருமை களைக் கடந்தவன், பொறாமை இல்லாதவன், வெற்றி தோல்விகளில் சமமாக இருப்பவன்— இத்தகையவன் செயலில் ஈடுபட்டாலும் அதனால் கட்டப்படுவதில்லை.**

*மூன்று நிபந்தனைகள்:*

***எதேச்சையாகக் கிடைப்பதில் மகிழ்ச்சி:*** எதையும் நாடாத மனம் இங்கே குறிப்பிடப்படுகிறது. கிடைத்ததை வைத்து வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

***இருமைகளைக் கடந்திருத்தல்:*** சூடு-குளிர், சுகம்-துக்கம், வெற்றி-தோல்வி போன்றவை இருமைகள். இரண்டையும் கடப்பது என்றால் இருவகை அனுபவங் களின்போது மனம் சமநிலையில் இருப்பது என்பது பொருள். 'நாளை உனக்குப் பட்டாபிஷேகம் என்று கூறிய போதும், நாட்டைவிட்டு காட்டிற்குப் போகுமாறு ஆணையிட்ட போதும் ஓவியத் தாமரைபோல் மலர்ந்தே இருந்த முகத்தை உடைய ஸ்ரீராமனை நினைத்தாள் சீதை' என்று ராம பிரானைப்பற்றி எழுதுகிறார் கம்பர்.[1] நன்மை வரும்போது துள்ளிக் குதிக்காத, தீமையெலாம் வந்துற்ற போதும் நிலைகுலையாத மனம் வேண்டும்.

---

*1. மெய்த்திருப்பதம் மேவு என்ற போதிலும்*
*இத்திருத் துறந்து ஏகு என்ற போதிலும்*
*சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை*
*ஒத்திருக்கும் முகத்தினை உன்னுவாள்.*

*—கம்பராமாயணம், சுந்தர காண்டம்*

***பொறாமையின்மை:*** *பிறருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போதுதான் பொறாமை போன்ற குணங்கள் தலைதூக்கு கின்றன. நாம் நமது வாழ்க்கையை முறையாக வாழ்ந்தால், நமது பாதையைச் சரியாகப் பின்பற்றினால் நாம் அடைய வேண்டியதை அடைந்தே தீர்வோம்; நமக்குக் கிடைக்க வேண்டியவை எல்லாம் கிடைத்தே தீரும். ஒவ்வொருவரும் தங்கள் முன்வினைப் பயனுக்கு ஏற்ப, மனப்பக்குவத்திற்கு ஏற்ப பயணம் செய்கிறார்கள். ஒருவருக்கொருவர் ஒப்பிட்டு பொறாமை வசப்படுவதன்மூலம் காலத்தை விரயம் செய்வ துடன், நமது முன்னேற்றத்தை நாமே தடுத்தவர்களாவோம்.*

**गतसङ्गस्य मुक्तस्य ज्ञानावस्थितचेतसः ।**
**यज्ञायाचरतः कर्म समग्रं प्रविलीयते ॥ २३ ॥**

**க**தஸங்**க**ஸ்ய முக்தஸ்ய ஜ்ஞானாவஸ்தித சேதஸ: ||
யஜ்ஞாயாசரத: கர்ம ஸமக்**ர**ம் ப்ரவிலீயதே || 23 ||

**க**தஸங்**க**ஸ்ய – *பற்றில்லாதவன்;* முக்தஸ்ய – *சுதந்திரன்;* ஜ்ஞான அவஸ்தித சேதஸ: – *ஆன்மவுணர்வில் நிலைபெற்ற மனத்தினன்;* யஜ்ஞாய – *வேள்வியாக;* ஆசரத: – *செய்பவன்;* ஸமக்**ர**ம் கர்ம – *எல்லா செயல் களும்;* ப்ரவிலீயதே – *கரைந்துவிடுகிறது.*

**23. பற்றில்லாத, சுதந்திரமான, ஆன்மவுணர்வில் நிலை பெற்ற மனத்தை உடைய, செயல்களை வேள்வியாகச் செய்கின்ற ஒருவனின் எல்லா செயல்களும் கரைந்து விடுகின்றன.**

*நான்கு நிபந்தனைகள்:*

*பற்றின்றி வேலை செய்ய வேண்டும், சுதந்திரனாக வேலை செய்ய வேண்டும், ஆன்மவுணர்வில் நிலைபெற்று வேலை செய்ய வேண்டும்—*

*இந்த மூன்றையும் ஒரு தொடராகக் காண்கிறார் சுவாமி விவேகானந்தர். பற்றின்றி வேலை செய்தால்தான் சுதந்திரனாக முடியும், சுதந்திரனாக வேலை செய்தால்தான்*

ஆன்மவுணர்வில் நிலைபெற முடியும். 'பற்றின்மை ஏறக்குறைய வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு அடையக் கூடிய ஒன்று. இந்த நிலையை அடையும்போது அன்பின் லட்சியத்தை அடைந்துவிடுகிறோம்; சுதந்திரர்களாகி விடுகிறோம்'[1] என்கிறார் அவர்.

பற்றின்மைதான் வாழ்க்கையின் ரகசியம். 'நம் இன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் பற்றே. நண்பர்கள், உறவினர்கள் என்று பலரிடமும் நாம் பற்று வைக்கிறோம்;... இந்தப் பற்றைத் தவிர வேறு எதுதான் துயரத்தைக் கொண்டு வருகிறது? பேரின்பம் பெற வேண்டுமானால் நாம் எதிலும் ஒட்டாதிருக்க வேண்டும். நினைத்தபோது பற்றற்று நிற்கும் திறமை நம்மிடம் இருக்கு மானால் எந்தத் துயரமும் இருக்காது. ஒரு பொருளின்மீது முழு ஆற்றலோடு பற்று வைக்கும் திறமையுடன், வேண்டும் போது அதிலிருந்து தன்னை முழுவதுமாக விலக்கிக் கொள் வதற்கான திறன் உடையவனே இயற்கையிலிருந்து மிகச் சிறந்ததைப் பெற முடியும். பற்றும் திறமை, விட்டுவிலகும் திறமையின் அளவுக்கு இருக்க வேண்டும். இங்கேதான் பிரச்சினை'[2] என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

அடுத்து, செயல்களை வேள்வியாகச் செய்தல். இதுபற்றி தொடரும் சுலோகங்களில் விரிவாகக் கூறுகிறார் ஸ்ரீபகவான்.

இவ்வாறு வேலை செய்பவனின் 'செயல்கள் கரைந்து விடுகின்றன' என்றால், அவன் வேலை செய்தும் செய்யாத நிலையை அடைந்துவிட்டான், செயலில் செயலின்மை காண்கின்ற நிலையை அடைந்துவிட்டான் என்று பொருள்.

**செயல்களை வேள்வியாகச் செய்தல்: *24–30***

செயலில் செயலின்மை காண்பதற்கு 15 நிபந்தனை களைக் கூறிவிட்டு, இறுதியாக வேள்விக் கருத்தை வைக் கிறார் ஸ்ரீபகவான். எந்தச் செயல்களை வேள்வியாகச் செய்வது? இதனைப் பல நிலைகளில் விளக்குகிறார் அவர்.

---

1. ஞான தீபம், 1.171.
2. ஞான தீபம், 1.214.

*வழிபாடு, புலனடக்கம், தவம், தானம், யோகம், ஏன், உலக இன்பங்களை அனுபவிப்பதைக்கூட வேள்வியாகச் செய்யுமாறு கூறுகிறார் அவர். இவ்வாறு 12 வேள்விகளைப் பற்றி அவர் கூறுகிறார். சுருக்கமாகச் சொன்னால் ஒவ்வொரு செயலையும் வேள்வியாகச் செய்ய வேண்டும்.*

## பிரம்ம வேள்வி

**ब्रह्मार्पणं ब्रह्म हविः ब्रह्माग्नौ ब्रह्मणा हुतम् ।**
**ब्रह्मैव तेन गन्तव्यं ब्रह्मकर्मसमाधिना ॥ २४॥**

*ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்ம ஹவி: ப்ரஹ்மாக்னௌ ப்ரஹ்மணா ஹுதம் |*
*ப்ரஹ்மைவ தேன கந்தவ்யம் ப்ரஹ்மகர்ம ஸமாதினா || 24 ||*

அர்ப்பணம் – *அர்ப்பணம் செய்வதற்கான கரண்டி;* ப்ரஹ்ம – *பிரம்மம்;* ஹவி: – *அர்ப்பணம் செய்யப் படுகின்ற பொருள்;* ப்ரஹ்ம – *பிரம்மம்;* ப்ரஹ்ம அக்னௌ – *பிரம்மமாகிய அக்கினியில்;* ப்ரஹ்மணா – *பிரம்மத்தால்;* ஹுதம் – *கொடுக்கப்படுகிறது;* ப்ரஹ்ம கர்ம ஸமாதினா – *பிரம்மகர்ம சமாதி நிலையில் உள்ள;* தேன – *அவனால்;* ப்ரஹ்ம ஏவ – *பிரம்மமே;* கந்தவ்யம் – *அடையப்படுகிறது.*

**24. அர்ப்பணம் செய்வதற்கான கரண்டி பிரம்மம். அர்ப்பணம் செய்யப்படுகின்ற பொருள் பிரம்மம். பிரம்மமாகிய அக்கினியில் பிரம்மத்தால் (பிரம்மமாகிய ஆஹுதி) கொடுக்கப்படுகிறது. பிரம்மகர்ம சமாதி நிலையில் உள்ள அவனால் பிரம்மமே அடையப்படுகிறது.**

*உருவம், குணங்கள் போன்ற அனைத்தையும் கடந்த நிலையில் இறைவன் பிரம்மம் என்று அழைக்கப்படுகிறார். அந்த நிலையில் அவரை அனுபூதியில் உணர்ந்த ஒருவனைப் பற்றி இந்தச் சுலோகம் கூறுகிறது.*

*பிரம்மகர்ம சமாதி நிலை என்றால் என்ன? எங்கே கர்மமும் (செயல்களும்) சமாதியும் (தியானம் போன்ற ஆன்மீக சாதனைகளும்) பிரம்மத்தால் (இறையுணர்வால்) ஒன்றுபடுத்தப் பட்டுவிட்டனவோ அது பிரம்மகர்ம சமாதி நிலை. அத்தகையவன் எதைச் செய்தாலும் அது தியானம், செய்கின்ற தியானம் எல்லாம் மாபெரும் செயல், அதாவது மாபெரும் செயல்களை உருவாக்க வல்லவை. ஸ்ரீராமகிருஷ்ணரை சுவாமி விவேகானந்தர், 'எப்போதும் செயல்பட்டுக் கொண்டிருப்பவரும், அற்புதச் செயல் களைப் படைத்தவரும்'[1] என்று குறிப்பிடுகிறார். ஸ்ரீராம கிருஷ்ணர் எப்போதும் சமாதியிலும் பக்திப் பெருக்கிலும் வாழ்ந்தவர். ஆனால் அவற்றை மாபெரும் செயல்களாகக் காட்டுகிறார் சுவாமி விவேகானந்தர்.*

*இத்தகையோரின் வாழ்வில் வேள்வி செய்யப்படு வதில்லை, 'நிகழ்கிறது'. அவர்கள் எதைச் செய்தாலும் அது ஒரு வேள்வியாகி விடுகிறது.*

*சுலோகத்தில் யாகம் ஒன்று உதாரணத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. யாகம் சம்பந்தப்பட்ட அனைத்தை யும் அவன் பிரம்மமாக, இறையுணர்வு நிறைந்ததாகக் காண் கிறான். இவ்வாறே அனைத்துப் பொருட்களும் அனைத்து நிகழ்ச்சிகளும் அவனுக்கு இறையுணர்வு பொலிந்து தோன்று கிறது. இந்த உயர்நிலை வேள்வியை பிரம்ம வேள்வி (பிரம்ம யஜ்ஞம்) என்று கொள்வோம்.*

## தெய்வ வேள்வி, வாழ்க்கை வேள்வி

**दैवमेवापरे यज्ञं योगिनः पर्युपासते ।**
**ब्रह्माग्नावपरे यज्ञं यज्ञेनैवोपजुह्वति ॥ २५ ॥**

**தை**வமேவாபரே யஜ்ஞம் யோ**கி**ன: பர்யுபாஸதே |
**ப்**ரஹ்மா**க்**னாவபரே யஜ்ஞம் யஜ்ஞேனைவோபஜுஹ்வதி || 25 ||

*1. கர்ம கலேவரம் அத்புத சேஷ்ட்டம் | —ஞான தீபம், 9.99.*

*அபரே – சில; யோ***கி***ன: – யோகிகள்;* **தை***வம் ஏவ – தெய்வங்களுக்கே; யஜ்ஞம் – வேள்வியை; பர்யுபாஸதே – செய்கிறார்கள்; அபரே – வேறு சிலர்; யஜ்ஞம் – வாழ்க்கையை; யஜ்ஞேன ஏவ – வாழ்க்கையின்மூலம்;* **ப்***ரஹ்ம அ***க்***னௌ – இறைவனாகிய அக்கினியில்; உபஜுஹ்வதி – ஆஹுதி யாக அளிக்கிறார்கள்.*

**25. சில யோகிகள் தெய்வ வழிபாட்டையே வேள்வி யாகச் செய்கிறார்கள். வேறு சிலர் வாழ்க்கையின்மூலம் வாழ்க்கையை இறைவனாகிய அக்கினியில் ஆஹுதியாக அளிக்கிறார்கள்.**

*இங்கே இரண்டு வேள்விகள் கூறப்படுகின்றன.*

*முதலில் தெய்வ வேள்வி. பொதுவாக பலனை எதிர் பார்த்து தெய்வ வழிபாடுகள் செய்கிறோம். அதே வழிபாட்டை ஒரு வேள்வியாக, அதாவது பலனை எதிர்பாரா மல் செய்யுமாறு இங்கே கூறப்படுகிறது. இது தெய்வ வேள்வி (தேவதா யஜ்ஞம்).*

*அடுத்தது வாழ்க்கை வேள்வி. இதில் வாழ்க்கையின் மூலம் வாழ்க்கையையே இறைவனாகிய அக்கினியில் ஆஹுதி அளிப்பது பேசப்படுகிறது. இந்த வேள்வியைச் சற்று விரிவாகக் காண்போம்.*

*செய்பவனைத் தவிர வேள்வியில் இரண்டு விஷயங்கள் சம்பந்தப்பட்டுள்ளன— 1. ஆஹுதி அளிக்கின்ற இடம், அதாவது அக்கினி. 2. ஆஹுதியாக அளிக்கப்படும் பொருள், அதாவது தானியங்கள், நெய் போன்றவை.*

*1. அக்கினி உயர்ந்த லட்சியங்களின் சின்னமாக அமைந் துள்ளது. அக்கினிக்கு இந்த இடத்தை அளிப்பதற்கான முக்கிய காரணங்கள் இரண்டு:*

i. *அக்கினி எப்போதும் மேல் நோக்கியே வளர்கிறது;* ii. *அக்கினியில் எதை இட்டாலும் அதனை ஏற்றுக்கொண்டு, தன்னிலை மாறாது வளர்கிறது. வாழ்க்கையும் அத்தகையதாக*

இருக்க வேண்டும்; எப்போதும் உயர்ந்த லட்சியங்களை நோக்கிச் செல்வதாக இருக்க வேண்டும். வாழ்க்கையை, அதன் இன்பதுன்பங்கள், நன்மை தீமைகள் அத்தனை யுடனும் அப்படியே ஏற்றுக்கொண்டு வளர வேண்டும்.

2. அடுத்து, அக்கினியில் ஆஹுதியாக அளிக்கப்படு கின்ற பொருட்கள். மலர், பழம் என்று இயற்கையாகக் கிடைக்கின்ற பொருட்களும், இயற்கையிலிருந்து கிடைப்ப வற்றைப் பக்குவப்படுத்தி தயார் செய்த நெய் போன்றவையும் அக்கினியில் சமர்ப்பிக்கப் படுகின்றன. இயற்கைப் பொருட் களை அப்படியே சமர்ப்பிக்கும்போது அக்கினியின் வளர்ச்சி தடைப்படுகிறது. ஆனால் பக்குவப்படுத்தி தயாரிக்கப்பட்ட நெய்யைச் சமர்ப்பிக்கும்போது அக்கினி ஓங்கி வளர்கிறது.

வாழ்க்கை லட்சியம் என்ற அக்கினியில் மனமாகிய ஆஹுதி அளிக்கப்படுகிறது. தூய்மைப் படுத்தப்படாத மனம் லட்சியத்துடன் சேரும்போது, அதாவது லட்சியத்தை அடைய முயலும்போது வேகம் தடைப்படுகிறது. அதே மனம் தூய்மைப்படுத்தப்பட்டு பக்குவம் பெற்று லட்சியத்தை நாடும்போது அது வாழ்க்கையின் வேகத்தை அதிகரிக்கிறது; லட்சியம் விரைவில் கைகூடுகிறது.

இவ்வாறு வாழ்க்கை தரும் அனுபவங்களை ஏற்றுக் கொண்டு மனத்தைப் பக்குவப்படுத்தி, ஓங்கி வளர்கின்ற உயர்ந்த லட்சியத்தில் அதனைச் சமர்ப்பித்து வாழ்வது வாழ்க்கை வேள்வி (ஜீவன யஜ்ஞம்).

## புலக் கட்டுப்பாட்டு வேள்வி, அனுபவ வேள்வி

**श्रोत्रादीनीन्द्रियाण्यन्ये संयमाग्निषु जुह्वति ।**
**शब्दादीन्विषयानन्य इन्द्रियाग्निषु जुह्वति ॥ २६ ॥**

**ச்**ரோத்ரா**தீ**னீந்**த்**ரியாண்யன்யே ஸம்யமா**க்**னிஷு ஜுஹ்வதி |
***சப்தாதீ***ன் விஷயானன்ய இந்**த்**ரியா**க்**னிஷு ஜுஹ்வதி || 26 ||

அன்யே – *மற்றவர்கள்;* **ச்**ரோத்ரா**தீ**னி – *செவி முதலிய;* இந்**த்**ரியாணி – *புலன்களை;* ஸம்யம அ**க்**னிஷு –

*கட்டுப்படுத்துதல் என்ற அக்கினியில்; ஜுஹ்வதி – சமர்ப்பிக்கிறார்கள்;* அன்யே – *சிலர்;* **சப்தாதீ**ன் – *கேட்டல் முதலிய;* விஷயான் – *விஷயங்களை;* இந்**த்**ரிய அ**க்**னிஷு – *புலன்கள் என்ற அக்கினியில்; ஜுஹ்வதி – சமர்ப்பிக்கிறார்கள்.*

**26. சிலர் செவி முதலிய புலன்களை கட்டுப்படுத்துதல் என்ற அக்கினியில் சமர்ப்பிக்கிறார்கள். சிலர் கேட்டல் முதலிய விஷயங்களை புலன்கள் என்ற அக்கினியில் சமர்ப்பிக்கிறார்கள்.**

*கட்டுப்படுத்துதல் என்ற அக்கினியில் செவி முதலிய புலன்களைச் சமர்ப்பிப்பது புலக்கட்டுப்பாட்டு வேள்வி (இந்திரியசம்யம யஜ்ஞம்). மெய் (தோல்), வாய், கண், மூக்கு, செவி என்பவை ஐம்புலன்கள். மனம் இந்தக் கருவிகள் வழியாக புறவுலகை அனுபவிக்கிறது. இந்தக் கருவிகள் புறவுலகை அடையாமல் தடுப்பதே இந்த வேள்வி. தெளிவாகச் சொல்வதானால், உலகின் இன்பதுன்பங்களிலிருந்து முகத்தைத் திருப்பிக்கொள்வது, ஒதுங்கிக் கொள்வது. இந்த வேள்வி துறவியருக்குள்ளது என்கிறார் ஸ்ரீதர சுவாமிகள்.*[1]

*அடுத்தது அனுபவ வேள்வி (விஷயபோக யஜ்ஞம்). வாழ்க்கை கொண்டு வருகின்ற இன்பதுன்ப அனுபவங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வது. பார்த்தல், கேட்டல், தொட்டு உணரல், முகரல், சுவைத்தல் என்பவையே விஷயங்கள். இவற்றின் வாயிலாக உலகை அனுபவிப்பது, ஆனால் 'பற்றின்றி அனுபவிப்பது'*[2]*தான் இந்த வேள்வி. இதை இல்லறத்தார்களுக்காக வைக்கிறார் ஸ்ரீதர சுவாமிகள். இந்த உலகம் இறைவனுக்கு உரியது என்ற உணர்வுடன் தியாக சிந்தையோடு உலகை அனுபவிக்குமாறுதான் உபநிஷதங்களும் கூறுகின்றன.*[3]

---

*1. நைஷ்ட்டிக* ***ப்***ரஹ்மசாரிண: ... இந்**த்**ரியாணி நிருத்ய ஸம்யம ப்ர**தா**னா: திஷ்ட்டந்தி ||

*2.* ***போக*** *ஸமயேऽப்யனாஸக்தா: ஸந்த: | —ஸ்ரீதர சுவாமிகள்*

*3. தேன த்யக்தேன* ***பு***ஞ்ஜீதா: | —ஈசாவாஸ்ய உபநிஷதம், 1.

## ஆன்ம ஒளி வேள்வி

**सर्वाणीन्द्रियकर्माणि प्राणकर्माणि चापरे ।**
**आत्मसंयमयोगाग्नौ जुह्वति ज्ञानदीपिते ।। २७ ।।**

ஸர்வாணீந்**த்**ரிய கர்மாணி ப்ராண கர்மாணி சாபரே |
ஆத்ம ஸம்யம யோ**காக்**னௌ ஜுஹ்வதி ஜ்ஞான**தீ**பிதே || 27 ||

*அபரே – சிலர்; ஜ்ஞான**தீ**பிதே – உணர்வொளி வீசுகின்ற; ஆத்ம ஸம்யம யோ**க** அ**க்**னௌ – ஆன்மாவில் மனத்தை நிலைநிறுத்துவதாகிய யோகம் என்ற அக்கினியில்; ஸர்வாணி – எல்லா; இந்**த்**ரிய கர்மாணி – புலன்களின் செயல்பாடுகளையும்; ப்ராண கர்மாணி ச – பிராணனின் செயல்பாடுகளையும்; ஜுஹ்வதி – சமர்ப்பிக்கிறார்கள்.*

**27. சிலர் உணர்வொளி வீசுகின்ற ஆன்மாவில் மனத்தை நிலைநிறுத்துவதாகிய யோகம் என்ற அக்கினியில் எல்லா புலன்களின் செயல்பாடுகளையும் பிராணனின் செயல் பாடுகளையும் சமர்ப்பிக்கிறார்கள்.**

ஆன்மஒளி வேள்வி (ஆத்ம சம்யம யஜ்ஞம்) என்பது அனைத்து செயல்களையும் ஆன்ம ஒளியில் சமர்ப்பிக்கின்ற உயர்ந்த நிலை வேள்வியாகும். சாதகன் தன் சாதனைகளின் பலனாக இதயத்தில் ஆன்ம ஒளி பிரகாசிப்பதைக் காண் கிறான். தன் செயல்கள் அனைத்தையும் அந்த ஒளியில் சமர்ப்பித்துவிட்டு, 'இயற்கையே வேலை செய்கிறது' என்பதை உணர்ந்து (3.5) அமைதியாக இருக்கிறான். ஆன்மாவில் அக்கினியை ஏற்றி வைத்தபடி இந்தச் சான்றோர் துறவு வாழ்வை நாடுகிறார்கள் என்கிறார் மனு.[1]

இந்த ஆன்ம ஒளியை எப்படிக் காண்பது? ஆத்ம சம்யம யோகத்தின்மூலம். தாரணை, தியானம், சமாதி மூன்றும் சேர்ந்தது சம்யமம்.[2] புறத்தில் ஓடுகின்ற மனத்தை அகத்தில்

1. *ஆத்மனி அக்னீன் ஸமாரோப்ய ப்ராஹ்மண: ப்ரவ்ரஜேத் க்ருஹாத் |*
*—மனு, 6.38.*

2. *பதஞ்ஜலி யோக சூத்திரங்கள், 3.1–4.*

ஒரு பொருளில் குவிப்பதற்கான முயற்சி தாரணை; எண்ணெய் ஒழுக்குபோல் மனம் இடையீடின்றி தொடர்ந்து அந்தப் பொருளில் லயித்திருப்பது தியானம்; தியானிப்பவன், தியானிக்கப்படும் பொருள், தியானம் என்ற மூன்றில் தியானிக்கப்படும் பொருள் மட்டும் ஒளிர்வது சமாதி.[1] 'சம்யமத்தில் வெற்றிபெறும்போது உணர்வொளி பிரகாசிக்கிறது.'[2] இந்த உணர்வொளியாகிய ஆன்ம ஒளியில் செயல்களைச் சமர்ப்பிப்பது ஆன்மஒளி வேள்வி, அதாவது ஆத்ம சம்யம யஜ்ஞம்.

செயல்கள் எனும்போது அனைத்து வகையான செயல்களும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் என்று புலன்கள் அனைத்தின் வாயிலாகவும், பத்து பிராணன்களாலும் செய்யப்படுகின்ற எல்லா செயல்களும்[3] இங்கே ஆன்ம ஒளியில் சமர்ப்பிக்கப்படுகின்றன; அனைத்து செயல்களும், அதாவது தூல, நுண்ணிய செயல்பாடுகள் அனைத்தும் அந்த ஆன்ம ஒளியைக் காண்பதற்காக, ஆன்ம வெளிப்பாட்டிற்காக பயன்படுத்தப் படுகின்றன.

---

1. இங்கே சமாதி குறிப்பிடப்படுவது தியானத்தின் ஓர் உயர்நிலை மட்டுமே; ஒரு படி மட்டுமே. இந்தப் படிகள் சென்று சேர்கின்ற சமாதி நிலைகளான சவிகல்ப சமாதி போன்றவற்றுடன் இதனைக் குழப்பிக் கொள்ள கூடாது.

2. பதஞ்ஜலி யோக சூத்திரங்கள்; 3.5.

3. ஞானேந்திரியங்கள் (அறிவுக் கருவிகள்) ஐந்து:

| | |
|---|---|
| கண் | பார்த்தல் |
| காது | கேட்டல் |
| மூக்கு | வாசனையறிதல் |
| நாக்கு | சுவையறிதல் |
| தோல் | உணர்தல் |

கர்மேந்திரியங்கள் (செயற்கருவிகள்) ஐந்து:

| | |
|---|---|
| வாய் | பேச்சு |
| கை | செயல்கள் |
| கால் | நடத்தல் |
| குதம், குறி | கழிவு வெளியேற்றம் |

## தான, தவ, யோக, அறிவு வேள்விகள்

**द्रव्ययज्ञास्तपोयज्ञा योगयज्ञास्तथाऽपरे ।**
**स्वाध्यायज्ञानयज्ञाश्च यतयः संशितव्रताः ॥ २८ ॥**

**த்**ரவ்யயஜ்ஞாஸ் தபோயஜ்ஞா யோ**க**யஜ்ஞாஸ் ததாऽபரே |
ஸ்வா**த்**யாய ஜ்ஞானயஜ்ஞா**ச்**ச யதய: ஸம்**சி**தவ்ரதா: || 28 ||

ததா – *அப்படியே;* யதய: – *சுயக் கட்டுப்பாடு உடையவர்கள்;* ஸம்**சி**த வ்ரதா: – *உறுதியான சங்கல்பத்தை உடையவர்கள்;* அபரே – *சிலர்;* **த்**ரவ்ய யஜ்ஞா: – *தானத்தை வேள்வியாகச் செய்பவர்கள்;* தபோ யஜ்ஞா: – *தவத்தை வேள்வியாகச் செய்பவர்கள்;* யோ**க** யஜ்ஞா: – *யோகத்தை வேள்வியாகச் செய்பவர்கள்;* ஸ்வா**த்**யாய ஜ்ஞான யஜ்ஞா: ச – *கற்பதையும் அறிவையும் வேள்வியாகச் செய்பவர்கள்.*

**28. அப்படியே சுயக்கட்டுப்பாடு உடைய, உறுதியான சங்கல்பத்தை உடைய சிலர் தானத்தை வேள்வியாகச் செய்கிறார்கள்; சிலர் தவத்தை வேள்வியாகச் செய்கிறார்கள்; சிலர் யோகத்தை வேள்வியாகச் செய்கிறார்கள்; சிலர் கற்பதையும் அறிவைப் பெறுவதையும் வேள்வியாகச் செய்கிறார்கள்.**

---

*பிராணன்கள் பத்து:*

| | | |
|---|---|---|
| பிராணன் | — | மேல் நோக்கிய இயக்கம் |
| அபானன் | — | கீழ் நோக்கிய இயக்கம் |
| வியானன் | — | எல்லா பக்க இயக்கம் |
| உதானன் | — | மரண வேளையில் உயிர் வெளியேற உதவுதல் |
| ஸமானன் | — | உணவு ஜீரணம் & உணவை ரத்தம் போன்றவையாக மாற்றுதல் |
| நாகன் | — | வாந்தி, ஏப்பம் |
| கூர்மன் | — | கண் இமைகளின் இயக்கம் |
| க்ருகலன் | — | பசி |
| தேவதத்தன் | — | கொட்டாவி |
| தனஜ்ஜயன் | — | உடம்பிற்கு ஆரோக்கியம் அளித்தல் |

—வேதாந்த சாரம், 77–85.

*1.* ***தான வேள்வி*** *(திரவிய யஜ்ஞம்): தன்னிடமுள்ள பொருளைத் தேவையும் தகுதியும் உள்ளவர்களுக்கு பலனை எதிர்பாராமல் பகிர்ந்தளித்தல். அதாவது தானம். வேதங்கள் கூறுகின்ற யாகங்களைச் செய்வதும் பொருள் வேள்வியே. 3.11–12 இந்த வேள்வியையே கூறுகிறது.*

*2.* ***தவ வேள்வி*** *(தவ யஜ்ஞம்): உபவாசம் போன்ற விரதங்கள், தேவைகளைக் குறைத்தல் போன்ற பயிற்சிகள் ஆகியவைமூலம் புலன்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தப் பழகுதல்.*

*3.* ***யோக வேள்வி*** *(யோக யஜ்ஞம்): யோகம் பழகுவது. யோகம்பற்றி 2.48,50 விளக்குகிறது.*

*4.* ***அறிவு வேள்வி*** *(ஸ்வாத்யாய ஞான யஜ்ஞம்): கற்றலின்மூலம் மன மயக்கத்தைக் கடந்து செல்வது. 2.52–53 இந்தக் கருத்தை விளக்குகிறது. கீதை படிப்பதையே ஓர் அறிவு வேள்வியாகக் கூறுகிறார் ஸ்ரீபகவான் (18.70).*

*'பிரணவம் போன்ற புனிதமான மந்திரங்களை ஜபிப்பதும் மோட்ச சாஸ்திரங்களைப் படிப்பதும் ஸ்வாத்யாயம்' என்று விளக்குகிறார் வியாசர்.*[1]

*ஸ்வ அத்யாய: என்னும்போது தன்னைப் படித்தல், தன்னைப் புரிந்துகொள்ளல், சுய ஆராய்ச்சி என்றும் பொருள்படும்.*

*எனவே ஸ்வாத்யாயம் என்பதை மூன்று அங்கங்களுடன் கூடியதாக நாம் கொள்ளலாம்— 1. இறைநெறியைக் காட்டுகின்ற நூல்களைப் படித்தல்; 2. மந்திர ஜபம்மூலம் இறைவனுடன் தொடர்பு; 3. சுய ஆராய்ச்சி. இத்தகைய ஸ்வாத்யாயம் என்னும் செல்வத்தால் இறைவன் நம்முள் ஒளிர்வார் என்கிறார் வேத வியாசர்.*[2]

---

*1. ப்ரணவாதி பவித்ராணாம் ஜப: மோக்ஷ சாஸ்த்ர அத்யயனம் ச |*
*—யோக சூத்திரங்கள், 2.1 விளக்கவுரையில்.*

*2. ஸ்வாத்யாய யோக ஸம்பத்யா பரமாத்மா ப்ரகாசதே |*
*—யோக சூத்திரங்கள், 1.28 விளக்கவுரையில்.*

**பிராணாயாம வேள்விகள்**

*'பிராணன் பொதுவாக மூச்சு என்று மொழிபெயர்க்கப் படுகிறது. ஆனால் அது மூச்சல்ல. பிரபஞ்சத்தில் உள்ள சக்தி களின் தொகுதியே பிராணன். ஒவ்வோர் உடலிலும் உள்ள சக்தி இது. இந்தச் சக்தியின் மிகவும் புலப்படுகின்ற வெளிப் பாடு சுவாசப்பையின் இயக்கம். மூச்சை உள்ளே இழுக்கும் போதே இந்த இயக்கம் உண்டாகிறது. இந்த இயக்கத்தை ஒழுங்குபடுத்தவே பிராணாயாமத்தில் முயற்சிக்கிறோம். மூச்சை வசப்படுத்துவதன்மூலம் இதைத் தொடங்குகிறோம். பிராணனை வசப்படுத்த இதுவே மிகவும் எளிய வழி'.*[1]

*'மனத்தின் ஆற்றல்களை ஒருமுகப்படுத்துவதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? உடலாகிய எந்திரத்தின் மூலச் சக்கரமாக* (fly-wheel) *மூச்சு உள்ளது. பெரிய எந்திரத்தில் மூலச்சக்கரம் முதலில் இயங்கும். பின்னர் அந்த இயக்கத்தின் காரணமாக நுட்பமான, மிக நுட்பமான பகுதிகள் எல்லாம் இயங்க ஆரம்பிக்கின்றன. உடலிலுள்ள அனைத்து பாகங் களுக்கும் இயங்குசக்தியை அளித்து ஒழுங்குபடுத்துகின்ற அந்த மூலச்சக்கரமே மூச்சு.'*[2] *'அதைக்கட்டுப்படுத்துவதன் மூலம் சரட்டு நூலாகிய நாடி இயக்கங்களையும், அதன் மூலம் மெல்லிய கயிறாகிய எண்ணங்களையும், இறுதி யாக, தடித்த கயிறாகிய பிராணனையும் கட்டுப்படுத்தி நாம் முக்தி பெறுகிறோம்.'*[3]

**अपाने जुह्वति प्राणं प्राणेऽपानं तथाऽपरे ।**
**प्राणापानगती रुद्ध्वा प्राणायाम परायणाः ॥ २९ ॥**
**अपरे नियताहाराः प्राणान्प्राणेषु जुह्वति ।**

அபானே ஜுஹ்வதி ப்ராணம் ப்ராணேऽபானம் ததாऽபரே |
ப்ராணாபான**கதீ** ரு**த்த்**வா ப்ராணாயாம பராயணா: || 29 ||
அபரே நியதாஹாரா: ப்ராணான் ப்ராணேஷு ஜுஹ்வதி |

1. *ஞான தீபம், 2.166.*
2. *ஞான தீபம், 2.26.*
3. *ஞான தீபம், 2.27.*

ததா – *அப்படியே;* நியத ஆஹாரா: – *உணவுக் கட்டுப் பாடு உடையவர்கள்;* அபரே – *சிலர்;* அபானே – *அபானனில்;* ப்ராணம் – *பிராணனையும்;* ப்ராணே – *பிராணனில்;* அபானம் – *அபானனையும்;* ஜுஹ்வதி – *சமர்ப்பிக்கிறார்கள்;* ப்ராண அபான கதீ – *பிராணன் மற்றும் அபானனின் போக்கை;* ருத்த்வா – *தடுத்து;* ப்ராணாயாம பராயணா: – *பிராணாயாமம் செய்வதில் ஈடுபடுகிறார்கள்.* அபரே – *சிலர்;* ப்ராணான் – *பிராணன் முதலானவற்றை;* ப்ராணேஷு – *பிராணன் முதலியவற்றில்;* ஜுஹ்வதி – *சமர்ப்பிக்கிறார்கள்.*

**29. உணவுக்கட்டுப்பாடு உடைய சிலர் அபானனில் பிராணனையும், பிராணனில் அபானனையும் சமர்ப்பிக் கிறார்கள். சிலர் பிராணன் மற்றும் அபானனின் போக்கைத் தடுத்து பிராணாயாமம் செய்வதில் ஈடுபடுகிறார்கள். சிலர் பிராணனின் செயல்பாடுகளைப் பிராணனில் சமர்ப்பிக் கிறார்கள்.**

நான்கு வேள்விகள் இங்கே கூறப்படுகின்றன. இவற்றில், மூச்சுப் பயிற்சிகள்மூலம் உடலிலுள்ள பிராணன்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு, முக்கியப் பிராணனைக் கட்டுப்படுத்துவதற்கான கருவிகளாக ஆக்கப்படுகின்றன. பத்து பிராணன்கள்[1] நமது உடலின் இயக்கங்களைக் கட்டுப் படுத்துகின்றன. அவற்றுள் முதலிரண்டு பிராணனும் அபானனும் ஆகும். இந்த இரண்டையும் இணைப்பது யோகியின் நோக்கம். 'அபானன் பிராணனை இழுக்கிறது, பிராணன் அபானனை இழுக்கிறது. கீழும் மேலுமாயிருக் கின்ற இவற்றை யோகம் அறிந்தவன் சேர்க்கிறான்'[2] என்கிறது ஸ்கந்த புராணம்.

இது மூன்று வழிகளில் செய்யப்படுகிறது :

---

1. பக். 210 அடிக்குறிப்பு காண்க.
2. அபான: கர்ஷதி ப்ராணம் ப்ராணாபானம் ச கர்ஷதி |
ஊர்த்த்வாதஸ் ஸம்ஸ்திதௌ ஏதௌ ஸம்யோஜயதி யோகவித் ||
—ஸ்கந்த புராணம், காசி கண்டம், அத். 14.

***1. பூரக வேள்வி:*** *காற்றை நாசித்துளை வழியாக உள்ளே இழுப்பது. அதன்மூலம், மேல்நோக்கிச் செல்வதை இயல்பாகக் கொண்ட பிராணன் தன் இருப்பிடமான இதயத்திலிருந்து கீழ்நோக்கித் தள்ளப்பட்டு குதத்திலுள்ள அபானனுடன் சேர்க்கப்படுகிறது. யோகக் கிரியையான இந்த பூரகம் இங்கே பிராணனை அபானனில் சமர்ப்பிக்கின்ற ஒரு வேள்வியாகச் சொல்லப்பட்டுள்ளது.*

***2. ரேசக வேள்வி:*** *காற்றை நாசித்துளை வழியாக வெளியே விடுவது. கீழ்நோக்கிச் செல்வதை இயல்பாகக் கொண்ட அபானன், தன் இருப்பிடமான குதத்திலிருந்து மேல்நோக்கித் தள்ளப்பட்டு இதயத்திலுள்ள பிராணனுடன் ஒன்றாக்கப்படுகிறது. யோகக் கிரியையான ரேசகம் இங்கே அபானனைப் பிராணனில் சமர்ப்பிக்கின்ற வேள்வியாகச் சொல்லப்பட்டுள்ளது.*

***3. பிராணாயாம வேள்வி:*** *பூரக வேள்வியில் பிராணனின் இயல்பான மேல்நோக்கிய இயக்கம் தடைப்படுகிறது. ரேசக வேள்வியில் அபானனின் இயல்பான கீழ் நோக்கிய இயக்கம் தடைப்படுகிறது. இரண்டின் இயக்கத்தையும் தடுப்பது கும்பகம். இதனை இரண்டு வழிகளில் செய்யலாம்: காற்றை முழுவதுமாக வெளியேற்றிவிட்டு மூச்சை உள்ளே இழுக்காதிருப்பது; அல்லது மூச்சை இழுத்து காற்றை நிரப்பிவிட்டு, வெளியே விடாதிருப்பது.*

*காற்றை உள்ளே இழுப்பது, வெளியே விடுவது, உள்ளே அல்லது வெளியே நிறுத்துவது— இந்த மூன்றும் சேர்ந்தது ஒரு பிராணாயாமம். இவற்றிற்கு இவ்வளவு காலம் என்று கணக்கு உள்ளது. அந்த விகிதம் தவறினால் அது உடல்நிலையையும் மனநிலையையும் குலைத்துவிடும். இவ்வாறு பிராண அபானன்களின் போக்கைத் தடுத்து பிராணாயாமம் செய்வது பிராணாயாம வேள்வி.*

***4. பிராண வேள்வி:*** *இது பிராணாக்னிஹோத்ரம் என்றும் அழைக்கப்படுகிறது. ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு பிராணனால் மற்ற பிராணனைகளைக் கட்டுக்குள் கொண்டு வருவது.*

இந்த ஒன்றரை சுலோகங்களில் 4 வகை வேள்விகள் கூறப்பட்டன. இவை அனைத்திற்கும் வைக்கப்பட்டுள்ள நிபந்தனை 'நியத ஆஹாரா:' ஆஹாரம் என்றால் 'உள்ளே ஏற்கப்பட்டது' என்று பொருள். ஐந்து புலன்கள் மூலமும் நாம் உள்ளே ஏற்கிறோம். கேட்பது, பார்ப்பது, முகர்வது, ஸ்பரிசிப்பது, சுவைப்பது போன்ற அனுபவங்கள் ஒவ்வொன்றும் அந்தந்தப் புலன்களுக்கு உணவாகிறது.

அனைத்து அனுபவங்களிலும் கட்டுப்பாடு தேவை. புலன்கள் வாயிலாக நாம் பெறுகின்ற அனுபவங்கள் ஒவ்வொன்றும் மனத்தில் பதிவுகளை விட்டுச் செல்கின்றன. இந்தப் பதிவுகள் சம்ஸ்காரங்கள் எனப்படுகின்றன. இந்த சம்ஸ்காரம் ஒவ்வொன்றும் ஓர் ஆற்றல் மையமாகச் செயல் படுகிறது. எந்தச் செயலின் அனுபவத்தால் ஒரு சம்ஸ்காரம் ஏற்பட்டதோ, அதே செயலை மீண்டும் நம்மைச் செய்ய வைக்கின்ற ஆற்றல் பெற்றவை சம்ஸ்காரங்கள். எனவே தேவைக்கு அதிகமான அனுபவங்கள் நம்முள் புகாதவாறு கவனித்துக்கொள்ள வேண்டும்.

சுவைப்புலன் இதில் முக்கியம். ஏனெனில் பிராணா யாமப் பயிற்சிகளில் உடம்பின் மென்மையான பகுதிகளான நுரையீரல் போன்றவை நேரடியாக ஈடுபடுகின்றன. எனவே இந்தப் பயிற்சிகளில் ஈடுபடுபவர்கள் உணவுக் கட்டுப் பாட்டில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும். உணவுபற்றி விரிவாக 17.7–10-இல் விளக்கப்படுகிறது.

## பன்னிரு வேள்விகளும் அவற்றின் நோக்கமும்

**அ**றிவின்மூலம் செயல்களைவிடுவது என்ற லட்சியத் தைப்பற்றி இந்த அத்தியாயத்தில் நாம் காண்கிறோம். எல்லா செயல்களில் ஈடுபட்டும், அதேவேளையில் அவற்றைச் செய்யாதவனாக ஆவது என்பதே லட்சியம். அதற்கு 15 நிபந்தனைகளைக் (19–23) கூறிய ஸ்ரீபகவான் 16-ஆவதாக செயல்களை வேள்வியாகச் செய்யுமாறு கூறுகிறார். இந்த 15 நிபந்தனைகளையும் நாம் ஆசையின்மை, பற்றின்மை, இறையுணர்வு என்ற மூன்றாகச் சுருக்கலாம். ஒரு செயல்

வேள்வியாக வேண்டுமானால் ஆசை வசப்பட்டு செய்யக் கூடாது, பற்று கூடாது, இறையுணர்வுடன் செய்ய வேண்டும்.

ஆனால் இறையுணர்வுடன் செயலை இணைப்பதாகிய 'பிரம்மகர்ம சமாதி நிலை' (24), அதாவது இறையுணர்வுடன் வேலை செய்வது என்பது மிகவுயர்ந்த நிலையாகும். இதனைப் புரிந்துகொள்ளாமல் பயிற்சிகளைத் தொடங்கும் போது குழப்பம் நேரிடுகிறது. உதாரணமாக ஆழ்ந்த படிப்பு, கணக்கு வேலைகள் போன்ற நுண்ணிய வேலைகளைச் செய்யும்போதே இறைவனை நினைக்க, இறையுணர்வுடன் செய்யத் தொடங்கினோமானால் சாதனையும் சரியாக நடைபெறாது, வேலையும் குழப்பத்திலேயே முடியும்.[1]

எனவே மனம் அவ்வளவு ஈடுபடத் தேவையில்லாத சில பயிற்சிகளைத் தந்து அதனுடன் இறைநினைவையும் இணைக்கச் சொல்கிறார் ஸ்ரீபகவான். மூச்சு விடுதல், சாப் பிடுதல், பார்த்தல், கேட்டல் போன்ற சாதாரண நிகழ்ச்சிகளை வேள்வியாக அதாவது ஆசையின்றி, பற்றின்றி, இறைவனுக் காக செய்யுமாறு அவர் (25–29) கூறுகிறார். இவையே நாம் இதுவரை கண்ட பன்னிரு வேள்விகள்.

சாதாரண நிகழ்ச்சிகளை இறைநினைவுடன் செய்வதில் வெற்றிபெற்ற பிறகு சற்று நுண்ணிய வேலைகளில் பயிற்சி செய்ய வேண்டும். அதன்பிறகு இன்னும் நுட்பமான வேலை களை இறைநினைவுடன் செய்வதற்கு பழக வேண்டும். இறுதியில் கர்மசமாதி நிலையை அதாவது நாம் செய்யும் செயலே தியானமாக ஆன்மீக சாதனையாக, இறைவழி பாடாக அமைகின்ற நிலையை அடைய வேண்டும். அதற்கு உதவுவனவே இந்த வேள்விகள்.

உடலளவில் செய்யப்படுபவை (25,28,29), மனத் தளவில் செய்யப்படுபவை (25,26,27,28,29), ஆன்ம நிலை யில் செய்யப்படுவது (27) என்று அனைத்து நிலைகளிலும் நாம் செய்கின்ற செயல்கள் இங்கே பேசப்படுகின்றன. இவ்வாறு சாதாரண வேலைகளில் தொடங்கி, படிப்படியாக

1. கீதை, 8.7 விளக்கவுரையும் காண்க.

*கர்மசமாதி நிலையை அடையச் செய்வதே இந்த வேள்வி களின் நோக்கம்.*

**வேள்வி வாழ்க்கையின் மகிமை: *30–33***

## सर्वेऽप्येते यज्ञविदो यज्ञक्षपितकल्मषाः ॥ ३० ॥

ஸர்வேऽப்யேதே யஜ்ஞவி**தோ** யஜ்ஞக்ஷபிதகல்மஷா: || *30* ||

யஜ்ஞவி**த**: – *வேள்வியை அறிந்த;* ஏதே ஸர்வே அபி – *இந்த அனைவரும்;* யஜ்ஞ க்ஷபித கல்மஷா: – *வேள்வி யால் குறைகள் நீங்கப் பெற்றவர்கள்.*

**30. வேள்வியை அறிந்த அனைவரும் வேள்வியால் குறைகள் நீங்கப் பெறுகிறார்கள்.**

## यज्ञशिष्टामृतभुजो यान्ति ब्रह्म सनातनम् ।
## नायं लोकोऽस्त्ययज्ञस्य कुतोऽन्यः कुरुसत्तम ॥ ३१ ॥

யஜ்ஞ**சி**ஷ்ட்டாம்ருத **பு**ஜோ யாந்தி **ப்**ரஹ்ம ஸனாதனம் |
நாயம் லோகோऽஸ்தயயஜ்ஞஸ்ய குதோऽன்ய: குருஸத்தம ||
31 ||

குருஸத்தம – *குருவம்சத்தில் சிறந்தவனே;* யஜ்ஞ **சி**ஷ்ட்ட அம்ருத **பு**ஜ: – *வேள்வியின் வாயிலாகக் கிடைக் கின்ற அமுதத்தை உண்பவர்கள்;* ஸனாதனம் – *நித்தியப் பொருளான;* **ப்**ரஹ்ம – *இறைவனை;* யாந்தி – *அடை கிறார்கள்;* அயஜ்ஞஸ்ய – *வேள்வியில் ஈடுபடாதவனுக்கு;* அயம் லோக: – *இந்த உலகம்;* ந அஸ்தி – *இல்லை;* அன்ய: – *மற்ற உலகம்;* குத: – *எங்கே.*

**31. குருவம்சத்தில் சிறந்தவனே! வேள்வியின் வாயிலாகக் கிடைக்கின்ற அமுதத்தை உண்பவர்கள் நித்தியப் பொருளான இறைவனை அடைகிறார்கள். வேள்வியில் ஈடுபடாதவனுக்கு இந்த உலகமே கிடையாது. மற்ற உலகம் எங்கே?**

*வாழ்க்கையை வேள்வியாக வாழ்பவன் அமுதம் உண்டவனுக்குச் சமமானவன் என்று கூறுகிறார் ஸ்ரீபகவான். அமுதம் உண்டவனுக்கு மரணம் இல்லை. எனவே வாழ்க்கையை வேள்வியாக வாழ்பவன் மரணமிலாப் பெரு நிலையை அடைகிறான் என்பது கருத்து. ஆசைகளுக்கும் பற்றிற்கும் அடிமைப்பட்டு வாழ்பவன் உண்மையில் இந்த உலகையும் அனுபவிப்பதில்லை. அத்தகைய ஒருவன் மரண மிலாப் பெருநிலையை அடைவதுபற்றி பேச்சே இல்லை.*

**एवं बहुविधा यज्ञा वितता ब्रह्मणो मुखे ।**
**कर्मजान्विद्धि तान्सर्वान् एवं ज्ञात्वा विमोक्ष्यसे ॥ ३२ ॥**

ஏவம் ***ப***ஹு^விதா யஜ்ஞா விததா ***ப்***ரஹ்மணோ முகே |
கர்மஜான் வி***த்தி*** தான் ஸர்வான் ஏவம் ஜ்ஞாத்வா விமோக்ஷ்யஸே ||

ஏவம் – *இவ்வாறு;* ***ப***ஹு^வி***தா***: – *பலவிதமான;* யஜ்ஞா: – *வேள்விகள்;* ***ப்***ரஹ்மண: முகே – *வேதங்களில்;* விததா: – *கூறப்பட்டுள்ளன;* தான் ஸர்வான் – *அவை அனைத்தும்;* கர்மஜான் – *செயல்களை ஆதாரமாகக் கொண்டவை;* வி***த்தி*** – *அறிந்துகொள்;* ஏவம் – *இவ்வாறு;* ஜ்ஞாத்வா – *அறிந்து;* விமோக்ஷ்யஸே – *விடுபடுவாய்.*

**32. இவ்வாறு பலவிதமான வேள்விகள் வேதங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் செயல்களை ஆதாரமாகக் கொண்டவை என்று அறிந்துகொள். இவ்வாறு அறிந்து, கர்மத்தளையிலிருந்து விடுபடுவாய்.**

**श्रेयान्द्रव्यमयाद्यज्ञात् ज्ञानयज्ञः परंतप ।**
**सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते ॥ ३३ ॥**

***ச்***ரேயான் ***த்***ரவ்யமயாத் யஜ்ஞாத் ஜ்ஞானயஜ்ஞ: பரந்தப |
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞானே பரிஸமாப்யதே || 33 ||

பரந்தப – *எதிரிகளை வாட்டுபவனே;* ***த்***ரவ்யமயாத் – *பொருட்களால் செய்யப்படுகின்ற;* யஜ்ஞாத் – *யாகத்தைவிட;*

ஜ்ஞான யஜ்ஞ: – *ஞான வேள்வி;* **ச்**ரேயான் – *சிறப்பானது;* பார்த்த – *அர்ஜுனா;* ஸர்வம் அகிலம் – *எல்லா;* கர்ம – *செயல்களும்;* ஜ்ஞானே – *ஞானத்தில்;* பரிஸமாப்யதே – *நிறைவடைகின்றன.*

**33. எதிரிகளை வாட்டுபவனே! புறப் பொருட்களால் செய்யப்படுகின்ற யாகத்தைவிட ஞான வேள்வி சிறப் பானது. அர்ஜுனா! எல்லா செயல்களும் ஞானத்தில் நிறை வடைகின்றன.**

***1. புற யாகம்:*** *இதில் யாக குண்டம், நெய் முதலான பொருட்கள், விறகு என்று புறப் பொருட்களால் அக்கினி வளர்த்து யாகம் செய்யப்படுகிறது. இது பொதுவாக, பதவி, புகழ், பிள்ளைப்பேறு போன்ற தேவைகளுக்காகச் செய்யப் படுபவை.*

***2. ஞான வேள்வி:*** *அக யாகமாகிய இது முற்றிலும் மனத்தில் செய்யப்படுகிறது. பொதுவாக இது இறைவனை அடைதல் அல்லது உயர் வாழ்வு போன்ற உயர் நோக்கங்களுக் காகச் செய்யப்படுகிறது. இங்கே யாக குண்டம், பொருட்கள், விறகு எல்லாமே ஒன்றுதான், அதாவது மனம்தான்.*

*இந்த இரண்டு யாகங்களுள் அக யாகமே, அதாவது அறிவின் துணையுடன் அகத்தில் செய்கின்ற வேள்வியே உயர்ந்தது என்று இங்கே ஸ்ரீபகவான் குறிப்பிடுகிறார். அத் தகைய சில வேள்விகளையே நாம் 24–29-இல் கண்டோம்.*

## ஞானம் கிடைக்க மகான்களை நாட வேண்டும்

**तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।**
**उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः ॥ ३४ ॥**

த**த்**வி**த்தி** ப்ரணிபாதேன பரிப்ர**ச்**னேன ஸேவயா |
உப**தே**க்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞானினஸ் தத்வ**த**ர்**சி**ன: || 34 ||

ப்ரணிபாதேன – *வணங்கியும்;* பரிப்ர**ச்**னேன – *கேள்விகள் கேட்டும்;* ஸேவயா – *பணிவிடை செய்தும்;*

*தத் – அந்த ஞானத்தை;* வி**த்தி** *– தெரிந்துகொள்ள வேண்டும்;* தத்வ**தர்சி**ன: – *உண்மையை அறிந்த;* ஜ்ஞானின: – *மகான்கள்;* தே – *உனக்கு;* ஜ்ஞானம் – *அந்த ஞானத்தை;* உப**தே**க்ஷ்யந்தி – *உபதேசிப்பார்கள்.*

**34. வணங்கியும், கேள்விகள் கேட்டும், பணிவிடை செய்தும் அந்த ஞானத்தைப் பெற வேண்டும். உண்மையை அறிந்த மகான்கள் உனக்கு அந்த ஞானத்தைத் தரு வார்கள்.**

*சத்சங்கம் அல்லது நல்லார் தொடர்பு என்பது வாழ்க்கை யில் மிக முக்கியமானதாகும். நல்லார் தொடர்பு நமக்கு நல்லறிவைத் தந்து வழிகாட்டுகிறது. நாம் எங்கே தவறு கிறோம், அந்தத் தவறிலிருந்து எப்படி மீள்வது என்பதை அவர்களுடனான ஒரு கணத் தொடர்பு நமக்கு உணர்த்திவிடும். உண்மையான நல்லவர்களை இனம் கண்டு, அவர்களைப் பணிந்து வணங்கி சேவைகள் செய்து, சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்து வாழ்வது சிறப்பு மிக்கது.*

**ஞானத்தின் மகிமை:** ***35–38***

**यज्ज्ञात्वा न पुनर्मोहम् एवं यास्यसि पाण्डव ।**
**येन भूतान्यशेषेण द्रक्ष्यस्यात्मन्यथो मयि ॥ ३५ ॥**

யஜ்ஜ்ஞாத்வா ந புனர்மோஹம் ஏவம் யாஸ்யஸி பாண்**ட**வ |
யேன **பூ**தாந்ய**சே**ஷேண **த்**ரக்ஷ்யஸ்யாத்மன்யதோ மயி || 35 ||

பாண்**ட**வ – *அர்ஜுனா;* யத் – *எதை;* ஜ்ஞாத்வா – *அறிந்தால்;* புன: – *மீண்டும்;* ஏவம் – *இப்படி;* மோஹம் – *குழப்பம்;* ந யாஸ்யஸி – *அடைய மாட்டாய்;* யேன – *எதனால்;* அ**சே**ஷேண – *எல்லா;* **பூ**தானி – *உயிர்களை;* ஆத்மனி – *உன்னிலும்;* அதோ – *அப்படியே;* மயி – *என்னிலும்;* **த்**ரக்ஷ்யஸி – *காண்பாய்.*

**35. அர்ஜுனா! அந்த ஞானத்தைப் பெற்றால் மீண்டும் இப்படி குழப்பம் அடைய மாட்டாய். அந்த ஞானத்தின் பயனால் எல்லா உயிர்களை உன்னிலும் அப்படியே என்னிலும் காண்பாய்.**

*33-ஆம் சுலோகத்தில், 'எல்லா செயல்களும் ஞானத்தில் நிறைவடைகின்றன' என்று சொல்லப்பட்டது. அந்த ஞானத்தின் பலன்கள் இங்கே கூறப்படுகின்றன. அத்தகைய ஓர் உணர்வு நம்மில் விழிப்புற்றால் அதன்பிறகு வாழ்க்கையில் குழப்பம் இல்லை. இது முதற்பலன்.*

*இரண்டாவதாக, இந்த உலகம் முழுவதையுமே நமது வளர்ச்சியின் ஒரு பகுதியாக நாம் காண்போம். இதனால் நமது வாழ்வில் ஒரு சமரசம், ஓர் இயைபு நிலவும்.இந்த இயைபு நமக்கு ஆன்மீக வாழ்வில் உயர் அனுபவங்களைத் தந்து இறைவனின் உண்மை இயல்பை உணர்த்துகிறது. இறைவன் எங்கும், எல்லா உயிர்களிலும் நிறைந்திருப்பதை நாம் காண்போம்.*

**अपि चेदसि पापेभ्य: सर्वेभ्य: पापकृत्तम: ।**
**सर्वं ज्ञानप्लवेनैव वृजिनं संतरिष्यसि ॥ ३६ ॥**

அபி சேதஸி பாபேப்ய: ஸர்வேப்ய: பாபக்ருத்தம: |
ஸர்வம் ஜ்ஞானப்லவேனைவ வ்ருஜினம் ஸந்தரிஷ்யஸி || 36 ||

ஸர்வேப்ய: பாபேப்ய: – *எல்லா பாவங்களிலும்;* பாபக்ருத்தம: அபி சேத் அஸி – *பெரிய பாவம் செய்தவனாக இருந்தாலும்;* ஸர்வம் வ்ருஜினம் – *எல்லா பாவங்களையும்;* ஜ்ஞான ப்லவேன ஏவ – *ஞானமாகிய தெப்பத்தால்;* ஸந்தரிஷ்யஸி – *கடப்பாய்.*

**36. பெரிய பாவம் செய்தவனாக இருந்தாலும், எல்லா பாவங்களையும் ஞானமாகிய தெப்பத்தால் கடப்பாய்.**

**यथैधांसि समिद्धोऽग्नि: भस्मसात्कुरुतेऽर्जुन ।**
**ज्ञानाग्नि: सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ॥ ३७ ॥**

ய**தை**தா**ம்**ஸி ஸமி**த்தோக்**னி: **ப**ஸ்மஸாத் குருதேऽர்ஜுன |
ஜ்ஞானா**க்**னி: ஸர்வ கர்மாணி **ப**ஸ்மஸாத் குருதே ததா || 37 ||

*அர்ஜுன – அர்ஜுனா; ஸமி**த்த:** அ**க்**னி: – கொழுந்துவிட்டெரியும் நெருப்பு; ஏ**தா**ம்ஸி – விறகு களை; யதா – எப்படி; **ப**ஸ்மஸாத் குருதே – சாம்பலாக்கு கிறதோ; ததா – அப்படி; ஜ்ஞான அ**க்**னி: – ஞானமாகிய நெருப்பு; ஸர்வ கர்மாணி – எல்லா வினைப்பயன் களையும்; **ப**ஸ்மஸாத் குருதே – சாம்பலாக்குகிறது.*

**37. அர்ஜுனா! கொழுந்துவிட்டெரியும் நெருப்பு விறகு களை எப்படி சாம்பலாக்குகிறதோ அப்படி ஞானமாகிய நெருப்பு எல்லா வினைப்பயன்களையும் சாம்பலாக்கு கிறது.**

*வினைப்பயன்களே பிறவிக்குக் காரணமாக அமை கின்றன. உண்மை ஞானம் கிடைப்பதால் பிறவியே இல் லாமல் போகிறது.*

**न हि ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते ।**
**तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ।। ३८ ।।**

நஹி ஜ்ஞானேன ஸ**த்**ருச**ம்** பவித்ரமிஹ வி**த்**யதே |
தத் ஸ்வயம் யோ**க**ஸம்ஸி**த்த**: காலேனாத்மனி விந்**த**தி || 38 ||

*இஹ – இங்கே; ஜ்ஞானேன ஸ**த்**ருச**ம்** – ஞானத்திற்கு இணையாக; பவித்ரம் – புனிதப்படுத்துவது; ந ஹி வி**த்**யதே – இல்லவே இல்லை; தத் – அந்த ஞானத்தை; யோ**க** ஸம்ஸி**த்த:** – யோகி; காலேன – காலக்கிரமத்தில்; ஆத்மனி – தன்னுள்; விந்**த**தி – அடைகிறான்.*

**38. புனிதப்படுத்துபவற்றுள் ஞானத்திற்கு இணையாக எதுவுமே இல்லை. யோகி அந்த ஞானத்தைக் காலக் கிரமத்தில் தன்னுள் அடைகிறான்.**

*மிக முக்கியமான மூன்று கருத்துக்கள் இங்கே சொல்லப்படுகின்றன—*

*1. ஞானம் மனிதனைப் புனிதப்படுத்துகிறது. அதாவது இறைநிலையில் நம்மைச் சேர்க்கிறது.*

*2. அந்த ஞானத்தைப் பெறுவதில் காலத்தின் இடம் மிக முக்கியமாகக் கருத்தில்கொள்ள வேண்டிய ஒன்றாகும். விதையை நட்டு, தண்ணீர் ஊற்றி, உரமும் இட்டுவிட்டால் நமது வேலை முடிந்தது. ஆனால் மறுநாளே செடி முளைத்துக் காய்த்துவிடும் என்பது அதன் பொருள் அல்ல. விதை முளைத்து செடி ஆவதற்கான அனைத்தையும் செய்த பிறகு காத்திருக்க வேண்டும். உரிய காலத்தில்தான் அது பலன் தரும். அவசரப்பட்டால் எல்லாம் கெட்டுவிடும். அவ்வாறே நமது முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் அதனுடன் காலத்திற்கும் உரிய இடத்தை அளிக்க வேண்டும். வாழ்க்கையில் வெற்றி பெற்ற அனைவரின் அனுபவங்களும் இதையே நமக்குக் காட்டுகின்றன.*

*3. ஞானத்தை ஒருவன் தன்னுள்ளே பெறுகிறான். அதாவது அந்த அறிவு ஏதாவது நூல்களைப் படித்தோ, யாரிடமிருந்தாவது கேட்டோ பெறக்கூடிய அறிவு அல்ல. தன்னுள் பூரித்து எழக்கூடிய ஓர் உணர்வு அது. வெளியில் அதனைத் தேடுவது அறிவீனம். இவ்வாறு தன்னுள் எழுகின்ற அந்த உணர்வுதான் ஞானம்; அது நம்மைப் புனிதப் படுத்துமே தவிர நூலறிவு அல்ல என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.*

**ஞானம் பெற என்ன செய்ய வேண்டும்?**

**श्रद्धावाँल्लभते ज्ञानं तत्परः संयतेन्द्रियः ।**
**ज्ञानं लब्ध्वा परां शान्तिम् अचिरेणाधिगच्छति ॥ ३९ ॥**

***ச்ரத்தா**வான் லபதே ஜ்ஞானம் தத்பர: ஸம்யதேந்**த்**ரிய: |*
*ஜ்ஞானம் ல**ப்**த்வா பராம் **சா**ந்திம் அசிரேணா**திக**ச்சதி || 39 ||*

*ச்ரத்தாவான் – சிரத்தை உடையவன்; தத்பர: – அந்த ஞானத்திலேயே கண்ணும்கருத்துமாக இருப்பவன்; ஸம்யத இந்த்ரிய: – புலன்களை வசப்படுத்தியவன்; ஜ்ஞானம் – ஞானத்தை; லபதே – பெறுகிறான்; ஜ்ஞானம் – ஞானத்தை; லப்த்வா – அடைந்து; அசிரேண – வெகுவிரைவில்; பராம் சாந்திம் – மேலான அமைதியை; அதிகச்சதி – அடைகிறான்.*

**39. சிரத்தை உடைய, ஞானத்திலேயே கண்ணும்கருத்துமான, புலன்களை வசப்படுத்திய ஒருவன் ஞானம் பெறுகிறான். அதன் காரணமாக வெகுவிரைவில் மேலான அமைதியைப் பெறுகிறான்.**

*ஞானத்தை அடைவதற்கு மூன்று அடிப்படைத் தேவைகள் இங்கே கூறப்படுகின்றன:*

*1. சிரத்தை: ஆழ்ந்த நம்பிக்கையுடன் கூடிய செயல்திறனே சிரத்தை. வெறும் நம்பிக்கை மட்டும் பலன் அளிப்பதில்லை. அந்த நம்பிக்கை, செயல்திறன் மிக்க முயற்சியாக வெளிப்பட வேண்டும்.*

*2. அந்த ஞானத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டபின், அந்த லட்சியம் ஒருபோதும் மனத்தைவிட்டு அகல இடம் கொடுக்கக் கூடாது. உடம்பும் மனமும் எந்த வேலையில் ஈடுபட்டிருந்தாலும் இந்த லட்சியம் எப்போதும் பின்னணியில் இருக்க வேண்டும்.*

*3. புலன்கள் தங்கள் போக்கில் போகாமல், அந்த நோக்கத்திற்கு அனுகூலமான பாதையில் செல்லும்படி பயிற்சி அளிக்க வேண்டும்.*

*ஞானம் என்றல்ல, வாழ்க்கையில் எந்த ஒன்றை அடைய வேண்டுமானாலும் இந்த மூன்று நிலைகளிலும் நாம் பாடுபட வேண்டும்:*

*1. சிந்தனை நிலை* (thinking)*:அந்த லட்சியத்தை நாம் அடைய முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை வேண்டும்.*

*2. உணர்ச்சி நிலை (feeling):அந்த லட்சியம் மனத்தை விட்டு அகலாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது, அந்த லட்சியத்திற்குத் தேவையானவற்றை ஏற்றுக்கொண்டு பிறவற்றை விலக்க வேண்டும். 3. செயல் நிலை (willing):அந்த லட்சியத்தை அடைய உரிய பாதை யில் முன்னேற வேண்டும், உழைக்க வேண்டும், பாடுபட வேண்டும்.*

**சந்தேகம் கூடாது: *40–42***

## अज्ञश्चाश्रद्दधानश्च संशयात्मा विनश्यति ।
## नायं लोकोऽस्ति न परो न सुखं संशयात्मनः ॥ ४० ॥

அஜ்ஞ**ச்**சா**ச்ரத்ததா**னச்ச ஸம்**ச**யாத்மா விந**ச்**யதி |
நாயம் லோ**கோ**ऽஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்**ச**யாத்மன: ||
*40* ||

அஜ்ஞ: ச – *அறிவற்றவன்;* அ**ச்ரத்ததா**ன: – *சிரத்தை இல்லாதவன்;* ஸம்**ச**யாத்மா ச – *சந்தேகவாதி;* விந**ச்**யதி – *அழிகிறான்;* ஸம்**ச**யாத்மன: – *சந்தேகவாதிக்கு;* அயம் – *இந்த;* லோக: – *உலகம்;* ந அஸ்தி – *இல்லை;* ந பர: – *அந்த உலகமும் இல்லை;* ந ஸுகம் – *சுகமும் இல்லை.*

> **40. அறிவற்ற, சிரத்தை இல்லாத, சந்தேகவாதி அழிகிறான். சந்தேகவாதிக்கு இந்த உலகமும் இல்லை, அந்த உலகமும் இல்லை, சுகமும் இல்லை.**

*சந்தேகம் வருவது வேறு, சந்தேகவாதியாக இருப்பது வேறு. ஏதோ ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் எப்போதாவது சந்தேகம் வரலாம். அதனைப் பெரியவர்களிடம் கேட்டோ, நூல்களின் துணையுடனோ விலக்கிக்கொள்ளலாம். இத் தகைய சந்தேகம் வரவேற்கத் தக்கது; வரவும் வேண்டும்.*

*ஆனால் எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுவது ஒருவகை நோயாகும். சிலவேளைகளில் இத்தகைய அவ நம்பிக்கை பெரிய பகுத்தறிவாகக் கருதப்படுகிறது. அது உண்மை யல்ல. 'கோயிலை நம்பாதவனும், எந்த மதப் பிரிவையும்*

*சாராதவனும், ''எதையும் நம்ப மாட்டேன்'' என்று சொல்லித் திரிபவனும் பகுத்தறிவுவாதி என்று எண்ணி விடாதீர்கள். அப்படி இல்லவேயில்லை. அப்படியெல்லாம் பிதற்றித் திரிவது இன்று ஒரு வீரச் செயலாகக் கருதப்படு கிறது. பகுத்தறிவுவாதியாக இருப்பதற்கு அவநம்பிக்கை மட்டுமின்றி அதற்கு மேலும் பல வேண்டும்'*[1] *என்கிறார் சுவாமி விவேகானந்தர்.*

*ஆரம்பத்திலேயே இத்தகைய மனப்போக்கைத் திருத்திக் கொள்ளாதவனின் வாழ்க்கை அழிவிலேயே முடிவடையும். சில நம்பிக்கைகளை ஆதாரமாகக் கொண்டே நமது வாழ்க்கை அமைந்துள்ளது. தாய் நம்மிடம், 'இவர் உன் தந்தை, இவர்கள் உன் சகோதர சகோதரிகள்' என்று கூறியதை நம்பித்தான் நாம் வாழ்கிறோம். 'அதை எப்படி நான் நம்புவது?' என்று யாரும் கேட்பதும் இல்லை; கேட்பவனின் வாழ்வு அழிவைத் தவிர வேறு எதையும் அடைந்ததும் இல்லை. அதுபோல் 'கடவுள் என்று ஒருவர் இருக்கிறார், அவரே அனைத்தையும் நடத்துகிறார்' என்று நமது ரிஷிகள் அனுபவபூர்வமாகக் கூறியதை நம்புவதும், நம்பி அதற்கேற்ப நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்வதும் நம்மை வளப் படுத்தும். மாறாக, அந்த உண்மையை உணர்வதற்கான எந்த முயற்சியிலும் ஈடுபடாமல் வெறுமனே 'நம்ப மாட்டோம்' என்று கூறித்திரிவது அழிவிற்கே வழிவகுக்கும்.*

**योगसंन्यस्तकर्माणं ज्ञानसंछिन्नसंशयम् ।**
**आत्मवन्तं न कर्माणि निबध्नन्ति धनंजय ॥४१॥**

யோ**க**ஸன்யஸ்த கர்மாணம் ஜ்ஞானஸஞ்சின்ன ஸம்**ச**யம் |
ஆத்மவந்தம் ந கர்மாணி நி**பத்**னந்தி **த**னஞ்ஜய || 41 ||

***த**னஞ்ஜய – அர்ஜுனா;* யோ**க** ஸன்யஸ்த கர்மாணம் – *யோகத்தினால் செயல்களை விட்டு;* ஜ்ஞான ஸஞ்சின்ன ஸம்**ச**யம் – *ஞானத்தினால் சந்தேகம் நீங்கப்பெற்று;*

---

*1. ஞான தீபம், 3.6.*

ஆத்மவந்தம் – *ஆன்மாவில் நிலைத்திருப்பவனை;* கர்மாணி – *செயல்கள்;* ந நிப**த்**னந்தி – *கட்டுவதில்லை.*

**41. அர்ஜுனா! யோகத்தினால் செயல்களை விட்டு, ஞானத்தினால் சந்தேகம் நீங்கப்பெற்று, ஆன்மாவில் நிலைத்திருப்பவனைச் செயல்கள் கட்டுவதில்லை.**

*யோகத்தினால் செயல்களை விட வேண்டும். அதாவது செயலில் செயலின்மை என்ற நிலையை அடைய வேண்டும் ஞானத்தினால், அதாவது அகவுணர்வால் சந்தேகம் நீங்கப் பெற வேண்டும். அவ்வாறு வேலை செய்பவனைச் செயல்கள் பந்தத்திற்கு உள்ளாக்காது.*

**तस्मादज्ञानसंभूतं हृत्स्थं ज्ञानासिनात्मनः ।**
**छित्त्वैनं संशयं योगमातिष्ठोत्तिष्ठ भारत ॥ ४२ ॥**

தஸ்மா**த**ஜ்ஞானஸம்**பூ**தம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞானாஸினாத்மன: |
சித்வைனம் ஸம்**ச**யம் யோ**க**மாதிஷ்ட்டோத்திஷ்ட்ட **பா**ரத ||
42 ||

தஸ்மாத் – *அதனால்;* ஹ்ருத்ஸ்தம் – *இதயத்தில் இருக்கின்ற;* ஆத்மன: – *ஆன்மாவைப்பற்றிய;* அஜ்ஞான ஸம்**பூ**தம் – *அறியாமையிலிருந்து தோன்றிய;* ஏனம் – *இந்த;* ஸம்**ச**யம் – *சந்தேகத்தை;* ஜ்ஞானஅஸினா – *ஞான மாகிய வாளினால்;* சித்வா – *வெட்டி;* யோ**க**ம் – *யோகத்தை;* ஆதிஷ்ட்ட – *பயிற்சி செய்;* **பா**ரத – *பரத குலத்தில் உதித்தவனே;* உத்திஷ்ட்ட – *எழுந்திரு.*

**42. இதயத்தில் இருக்கின்ற ஆன்மாவைப்பற்றிய, அறியாமையிலிருந்து தோன்றிய இந்தச் சந்தேகத்தை ஞான வாளினால் வெட்டி யோகத்தைப் பயிற்சி செய். பரத குலத்தில் உதித்தவனே, அதற்காக எழுந்திரு.**

இதி ஸ்ரீம**த்பக**வத்**கீ**தாஸு உபநிஷத்ஸு **ப்**ரஹ்ம வி**த்**யாயாம்
யோ**க**சாஸ்த்ரே ஸ்ரீக்ருஷ்ணார்ஜுன ஸம்வா**தே** ஜ்ஞான கர்ம
ஸன்யாஸ**யோகோ** நாம சதுர்த்தோ**த்**யாய: ||

## 4. கடமைகளை வேள்வியாகச் செய்

### *சுருக்கம்*

*1. யோகங்களின் பழமை: 1–3*

*2. அவதார தத்துவம்: 4–12*

i. *எப்படி நிகழ்கிறது: 6*

ii. *எப்போது நிகழ்கிறது: 7*

iii. *ஏன் நிகழ்கிறது: 8*

iv. *அறிவதால் என்ன பயன்: 9*

v. *அறிவது எப்படி: 10*

vi. *பாதைகள் பல: 11–12*

*3. செயலில் செயலின்மை (ஞானகர்ம சன்னியாசம்): 13–42*

i. *ஸ்ரீபகவானின் வாழ்க்கை ஓர் உதாரணம்: 13–15*

ii. *எதைச் செய்வது? எதை விடுவது?: 16–17*

iii. *செயலில் செயலின்மை காண்பவன் எல்லா செயல் களையும் செய்தவன்: 18*

iv. *நிபந்தனைகள்: 19–23*

v. *செயல்களை வேள்வியாகச் செய்தல்: 24–30*
*பல்வேறு வேள்விகள்:*

*பிரம்ம வேள்வி : 24; தெய்வ வேள்வி : 25; வாழ்க்கை வேள்வி : 25; புலக்கட்டுப்பாட்டு வேள்வி : 26; அனுபவ வேள்வி : 26; ஆன்ம ஒளி வேள்வி : 27; தான வேள்வி : 28; தவ வேள்வி : 28; யோக வேள்வி : 28; அறிவு வேள்வி : 28; பிராணாயாம வேள்விகள்: பூரக வேள்வி, ரேசக வேள்வி, பிராணாயாம வேள்வி, பிராண வேள்வி : 29–30.*
**பன்னிரு வேள்விகளும் அவற்றின் நோக்கமும்: பக்.215**

vi. *வேள்வி வாழ்க்கையின் மகிமை: 30–33*

vii. *ஞானம் கிடைக்க மகான்களை நாடவேண்டும்: 34*

viii. *ஞானத்தின் மகிமை: 35–38*

ix. *ஞானம் பெற என்ன செய்ய வேண்டும்: 39*

x. *சந்தேகம் கூடாது: 40–42*

# அகராதி

அத் – சுலோ.

## அ – अ


| | |
|---|---|
| அகீர்த்திம் சாபி | 2-34 |
| அக்ஷரம் **ப்**ரஹ்ம | 8-3 |
| அக்ஷராணாம் அகாரோ | 10-33 |
| அ**க்**னிர் ஜ்யோதிரஹ: | 8-24 |
| அச்சே**த்**யோऽயம் | 2-24 |
| அஜோऽபி ஸன் | 4-6 |
| அஜ்ஞச்ச அ**ச்**ர**த்த** | 4-40 |
| அத்ர **சூ**ரா | 1-4 |
| அத கேன ப்ரயுக்தோ | 3-36 |
| அத சித்தம் ஸமா**தா**தும் | 12-9 |
| அத சேத் த்வமிமம் | 2-33 |
| அத சைனம் நித்ய | 2-26 |
| அதவா **ப**ஹுனா | 10-42 |
| அதவா யோ**கி**னாமேவ | 6-42 |
| அத வ்யவஸ்திதான் | 1-20 |
| அதைதத**ப்**யச**க்**தோ | 12-11 |
| அ**த்**ருஷ்டபூர்வம் | 11-45 |
| அ**தே**ச**காலே யத் | 17-22 |
| அ**த்**வேஷ்ட்டா ஸர்வ | 12-13 |
| அ**த**ர்மம் **த**ர்மமிதி | 18-32 |
| அ**த**ர்மாபி**ப**வாத் | 1-41 |
| அ**த**ஸ்சோர்**த்**வம் | 15-2 |
| அ**தி**பூ**த**ம் க்ஷரோ | 8-4 |
| அ**தி**யஜ்ஞ: கதம் | 8-2 |
| அ**தி**ஷ்ட்டானம் ததா | 18-14 |
| அ**த்**யாத்ம ஜ்ஞான | 13-11 |
| அ**த்**யேஷ்யதே ச ய | 18-70 |
| அனந்தவிஜயம் | 1-16 |
| அனந்த**ச்**சாஸ்மி | 10-29 |
| அனன்யசேதா: | 8-14 |
| அனன்யா**ச்**சிந்த யந்தோ | 9-22 |
| அனபேக்ஷ: **சு**சிர்**த**க்ஷ | 12-16 |
| அனா**தி**த்வாத் | 13-31 |
| அனா**தி** ம**த்**யாந்தம் | 11-19 |
| அனா**ச்**ரித: கர்மஃபலம் | 6-1 |
| அனிஷ்ட்டமிஷ்ட்டம் | 18-12 |
| அனு**த்**வேக**க**ரம் | 17-15 |
| அனு**ப**ந்**த**ம் க்ஷயம் | 18-25 |
| அனேக சித்த வி**ப்**ராந்தா: | 16-16 |
| அனேக **பா**ஹூ**த**ர | 11-16 |
| அனேக வக்த்ர நயனம் | 11-10 |
| அந்தகாலே ச மாமேவ | 8-5 |
| அந்தவத்து ஃபலம் | 7-23 |
| அந்தவந்த இமே | 2-18 |
| அன்னா**த் ப**வந்தி | 3-14 |
| அன்யே ச **ப**ஹவ: | 1-9 |
| அன்யே த்வேவம் | 13-25 |
| அபரம் **ப**வதோ | 4-4 |
| அபரே நியதாஹாரா: | 4-30 |
| அபரேயமிதஸ்த்வன்யாம் | 7-5 |
| அபர்யாப்தம் | 1-10 |
| அபானே ஜுஹ்வதி | 4-29 |
| அபி சேத் | 9-30 |
| அபி சே**த**ஸி | 4-36 |
| அப்ரகா**சோ** | 14-13 |